Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 242

ஞாயிற்றுக்கிழமை
27 ஜூலை 2025

ஆடி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## முதியவர் சடலமாக மீட்பு

யாழ்., ஜூலை 27
வீட்டில் உறங்கச் சென்ற முதியவர் ஒருவர் நேற்று அதிகாலை சடலமாக

04

## கொக்குளாய் கடலில் மீனவர் மாயம்

முல்லைத்தீவு, ஜூலை 27
கொக்குளாய் கடலில் கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள்

15

## 46 சான்றுப் பொருள்கள் நீதிமன்றில் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27
செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை நடைபெற்ற அகழ்வு நடவடிக் கைகளில் மீட்கப்பட்ட 46 சான்றுப்பொருள்கள் நீதிமன்றத்திடம் கையளிக்கப்

15

செம்மணிப் புதைகுழியில்

## 100 ஐத் தாண்டின எலும்புக்கூடுகள்

நேற்றும் 11 மனித என்புக்கூடுகள் அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 27
செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்றும் அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்த நிலையில், புதிதாக 11 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட் டன. இந்த என்புத் தொகுதிகளுடன்

15

# சர்வதேசப் பொறிமுறையே அநீதிகளுக்கான ஒரேதீர்வு!

வலியுறுத்தி வடக்கு, கிழக்கில் நேற்று கவனவீர்ப்பு
பெருந்திரளானனோர் பங்கேற்பு




யாழ்ப்பாணம், ஜூலை 27
தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச நீதிப் பொறிமுறைகள் ஊடாகவே தீர்வு வழங்கப்படமுடியும் என்பதை வலியுறுத்தி நேற்று வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக் கப்பட்டன. வடக்கு – கிழக்குச் சமூக இயக் கத்தின் ஏற்பாட்டில் வடக்கு கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் மு.ப. 10 மணியளவில் சம நேரத்தில் கவனவீர்ப்புப் போராட் டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

15



## சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!

விரிவு பக்கம்:- 15

சட்டத்தரணிக்கான உடையுடன் செல்லாததால்

## திரும்பிச் சென்ற கஜேந்திரகுமார்!



யாழ்ப்பாணம், ஜூலை 27
செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிடச் சென்ற நாடாளு

15

## திடீரென மயங்கிய குடும்பஸ்தர் சாவு!

யாழ்ப்பாணம், ஜூலை 27
திடீரென மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் சுன்னாகத்தில்

04

## மாதாவின் திருச்சொரூபத்தை போதையில் உடைத்த கும்பல்!

ஊர்காவற்றுறையில் 8 பேர் கைது



யாழ்., ஜூலை 27
மது போதையில் மாதா திருச்சொரூபத்தை உடைத்து, தேவாலயத் துக்குச் சேதம் விளை வித்த குற்றச்சாட்டில் தேசிய மக்கள் சக்தி யைச் சேர்ந்த அரசி யல்வாதி உட்பட 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளனர்.

15

### முச்சந்தி முரளி

'அவைக்கு போதையில அது மாதாவின்ர சிலை எண்டு தெரியாமப் போட்டுது போல'

## சஞ்சீவி

உலகளாவிய சுகாதாரத்துக்கு அதிகாரமளித்தல்

நீரிழிவு நோயை வென்று ஆரோக்கியமாக வாழ்ந்திட



GINSOMIN®

அத்தியாவசியமான 19 விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் அடங்கிய Korean Panax Ginseng

ஜின்சோமினில் உள்ள உண்மையான Korean Panax Ginseng இன்சுலின் உணர்திறனை மேம்படுத்துவதற்கும் உடலில் இன்சுலின் எதிர்ப்பை குறைப்பதற்கும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

MEGA We care
For Your Wellness
WWW.megawecare.lk
0114 375 364 | 077 34 100 71
இறக்குமதி செய்து விநியோகிப்போர் : A Baur & Company (Pvt.) Limited

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| லொத்தர் | திகதி | சீட்டிழுப்பு இலக்கம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | மேலதிக விபரம் |
|---|---|---|---|---|---|
| கொவிசெத | 26.07.2025 | 4144 | Y | 04 13 31 54 | விசேட எழுத்து Y |
| ஹந்தஹன ராசி சுப பலன் | 26.07.2025 | 1211 | | 15 31 50 60 | வெற்றி இலக்கினம் மேடம் |
| NLB ஜய | 26.07.2025 | 0170 | Q | 6 8 1 9 | |
| மெகா பவர் | 26.07.2025 | 2250 | H | 27 31 34 66 | சுப்பர் இலக்கம் 26 |
| மஹஜன சம்பத | 26.07.2025 | 5902 | B | 2 9 6 9 1 2 | |
| தன நிதானய | 26.07.2025 | 1932 | C | 04 10 20 76 | விசேட எழுத்து C |
| அத சம்பத | 26.07.2025 | 0477 | B | 6 9 1 2 | |
| சுப தவசக் | 26.07.2025 | 0018 | | 24 26 32 48 | வெற்றி இலக்கினம் கன்னி |

# இனவழிப்பைச் செய்தவர்களிடமே பொறுப்புக்கூறலை ஒப்படைக்காதீர்

## கஜேந்திரன் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், ஜூலை 27**

**யுத்தம் நடைபெறுகின்றபோது இந்த இலங்கை அரசிற்கு முழுமையாகத் துணைநின்ற ஐ.நா., யுத்தம் நிறைவடைந்த பின்னர் அந்த இனவழிப்பை மேற்கொண்டவர்களிடமே பொறுப்புகூறல் விவகாரத்தை ஒப்படைத்துக் கொண்டு வருவது என்பது ஏமாற்றகரமான விடயம். பக்கச்சார்பற்ற ஒரு முழுமையான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

செம்மணியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் பின் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உணவுத்தடை மற்றும் மருந்துத் தடை என்பவற்றையும் ஆயுதமாகப் பயன்படுத்தி அந்த இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது. அதன்பின்னர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் பல இளைஞர்களும் யுவதிகளும் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவக்குழுக்களினாலும் கைதுசெய்யப்பட்டும், கடத்தப்பட்டும் காணாமலாக்கப்பட்டார்கள். இப்போது செம்மணிப் புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வன்புணர்வுகளுக்கும் உட்படுத்தப்பட்டுக்கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை. இந்த இனப்படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் உள்ளகப் பொறிமுறை மூலம் எந்தவிதமான நீதியும் கிடைக்காது. எனவே எமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அது தொடர்பான தீர்மானமானது ஐ.நா.வின் பொதுச்சபையில் நிறைவேற்றப்படவேண்டும் - என்றார். (ச-27)

# மக்களுக்கான சக்தியாக மொட்டு உருவெடுக்கும்

## நாமல் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 27

நாட்டு மக்களுக்காகச் சேவையாற்றக்கூடிய அரசியல் சக்தியாக ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுன மீண்டும் உருவெடுக்கும் என்று அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் வழங்கிய ஆணையை மறந்து காலத்தை வீணடிப்பதை விடுத்து நாட்டுக்குத் தேவையான வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

தாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய் என அவர்களே தற்போது நிரூபித்துக்கொண்டிருக்கின்றனர். இதுவே அவர்களுக்குச் சவாலாக அமையும். இந்த அரசாங்கத்துக்கு மக்கள் எதற்காக ஆணையை வழங்கினர் என்பதை அவர்கள் மறந்துவிட்டனர். கல்வி மறுசீரமைக்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் வரலாறு பாடம் நீக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது. ஜே.வி.பி.யின் விருப்பத்துக்கமைய கல்வித்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது. உலகப் போக்குக்கமைய கல்வி முறைமை அறிமுகப்படுத்தப் படவேண்டும்-என்றார். (எ-இ)

# 74 துப்பாக்கிச்சூடுகள் 40 பேர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 27

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் கடந்த வியாழக்கிழமை வரை நாடுமுழுவதும் 74 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 40 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கல்கிசைப் பொலிஸ் பிரிவில் மட்டும் இதுவரை 8 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன, கல்கிசை, தெஹிவளை மற்றும் கொஹுவளைப் பொலிஸ் பிரிவுகளில் துப்பாக்கிச் சூடுகள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கும் வெளிநாடுகளில் உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கும் இடையிலான மோதலின் விளைவாக நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# 67 இலங்கையர்களுக்கு இன்டர்போல் பிடியாணை

கொழும்பு, ஜூலை 27

வெளிநாடுகளில் மறைந்திருக்கும் 67 இலங்கையர்களுக்கு சர்வதேச பொலிஸின் சிவப்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாடு கடந்த குற்றவியல் வலையமைப்புகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்களில் சிலர் போலிக் கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்திக் கண்டறிதலைத் தவிர்க்கமுயற்சிக்கின்றனர் என்றும் இதனால் அவர்களின் சரியான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கின்றது என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். எனினும், அவர்களில் பலர் தற்போது எந்தெந்த நாடுகளில் பதுங்கியிருக்கிறார்கள் என்பதை புலனாய்வுத்துறை வெளிப்படுத்தியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0610 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 9 8 3 7 4 7 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2876 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 11 38 72 76 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 16 49 54 69 |
| வெற்றி வாரம் | 5037 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0734 |
| வெற்றி இலக்கம் | 05 22 31 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ராசி | கும்பம் |
| வெற்றி இலக்கம் | 18 19 24 31 |
| சீட்டிழுப்பு வாரம் | 4588 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 44 65 70 72 |
| வெற்றி வாரம் | 2052 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 26.07.2025 |
| தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கம் | 26 52 59 69 |
| வெற்றி வாரம் | 2702 |



# ஆரியகுளம் சந்தியருகே மலக்கழிவுத் துர்நாற்றம்

## பொதுமக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதியோரமாக அமைந்துள்ள வெள்ளவாய்க்காலில் மலக்கழிவுத் துர்நாற்றம் வீசுவதாக யாழ்.மாநகரசபையின் சுகாதாரக் குழுவில் பொதுமக்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதனையடுத்து நேற்றுமுன்தினம் மாலை உடனடியாக யாழ். மாநகரசபையின் சுகாதாரக் குழுத் தலைவர் சாருஜன், யாழ். மாநகரசபையின் உறுப்பினர்களான சதீஸ், மதுசாந் ஆகியோர் நேரடியாகச் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர். இதன்போது வெள்ளவாய்க்காலிலிருந்து மலக்கழிவுத் துர்நாற்றம் வெளிவருவது உறுதிசெய்யப்பட்ட நிலையில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான உணவுப்பழக்கங்களால் சிறுவர்களையும் பீடிக்கும் நீரிழிவு

நல்லூர்ச் சுகாதார மருத்துவ அதிகாரி ஜெபரட்ணம் எச்சரிக்கை



**யாழ்ப்பாணம், ஜூலை 27**

**தற்காலத்தில் 15 வயதுச் சிறுவர்களைக் கூட நீரிழிவு நோய் ஆட்கொள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. எமது உணவுப்பழக்கவழக்கமுறைகளும், உடற்பயிற்சி இல்லாமையுமே இந்நிலைமைக்கு வழிவகுக்கின்றது என்று நல்லூர்ச் சுகாதார மருத்துவ அதிகாரி ஜெபரட்ணம் தெரிவித்துள்ளார்.**

பொற்பதி அறிவாலயம் நடத்திய சரஸ்வதி முன்பள்ளியின் போசாக்குக் கண்காட்சிநிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அறிவாலய மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய காலங்களில் 60 வயது அல்லது அதற்குப் பின்னரான வயதுகளில்தான் நீரிழிவுநோய் ஏற்பட்டுள்ளது. ஆனால், தற்காலத்தில் 15 வயதுச் சிறுவர்களைக் கூட நீரிழிவு நோய் ஆட்கொள்கின்றது. தற்காலத்தில் இயற்கையாகக் கிடைக்கும் உணவுகளை விடுத்துத் துரித உணவுப் பழக்கவழக்கத்தில் நாட்டம் செலுத்துவதால் தொற்றா நோய்களின் தாக்கம் கணிசமானளவு அதிகரித்துள்ளது. முறையான உணவுப்பழக்கவழக்கத்தையும், உடலுக்கும், உள்ளத்துக்கும் ஆரோக்கியமான உடற்பயிற்சியையும் பிள்ளைகள் சிறுவயதிலிருந்து கைக்கொள்வதற்குப் பழக்கப்படுத்துவது அவசியமானது- என்றார். (ச-66)

# தமிழ் அரசியற் கைதிகளின் வாழ்வில் ஒளியேற்றுங்கள்!

மானிப்பாய் அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்



யாழ்ப்பாணம், ஜூலை 27

மிகமோசமான துன்பியல்களை பல வருடங்களாக அனுபவித்துவரும் அரசியற்கைதிகளின் விடுதலையை விரைந்து மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் உறுப்பினர் கலொக் கனநாதன் உஷாந்தனால் முன்வைக்கப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை அமர்வு நேற்றுமுன்தினம் கூடியது.

இதன்போதே சபையின் உறுப்பினர் உஷாந்தன், பல்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு காரணங்களைக் காட்டி சிறையில் தமிழ் அரசியற்கைதிகள் இருள் சூழ் நாள்களைக் கழித்துவருகின்றனர்.


ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியற்கைதிகள் விவகாரம் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் எனக் குறிப்பிட்ட இப்போதைய ஜனாதிபதி இவ்விடயத்தில் பாராமுகம் காட்டுகிறார். எனவே தமிழ் அரசியல் கைதிகள் எவ்விதமான நிபந்தனையும் இன்றி பொதுமன்னிப்பு அடிப்படையில் விடுவிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்து பிரேரணையை முன்வைத்தார். அந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ச-27)




## முத்திரை வெளியீடு

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விழா கல்லூரி பிரதி அதிபர் தலைமையில் நேற்றுமுன்தினம் கல்லூரி மத்தியுஸ் மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-9,66)



ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தின் இறுதிநாளான கடந்த புதன்கிழமை வைரவப் பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளி வீதிவலம் வந்தார். (ச-17)

## வடக்கின் சுற்றுலா தேவைகள் மதிப்பீடு

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டத்தால் (யு.என்.டி.பி) நடத்தப்பட்ட வடக்கு மாகாணத்தின் சுற்றுலாத் தேவைகள் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக உலக வங்கி உட்கட்டுமான அபிவிருத்திகளுக்கு எங்களுக்கு உதவ இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் சுற்றுலாவுக்கு ஒரு துடிப்பான, நிலையான எதிர்காலத்துக்கு வழிவகுக்க இந்தத் தருணத்தைப் பயன்படுத்துவோம் - என்றார். (ச-66,27)


## குறைபாட்டுடன் இயங்கிய உணவகத்துக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம், ஜூலை 27

பருத்தித்துறை நகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று நீதிமன்ற உத்தரவுக்கமைய 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகரினால் உணவகத்தில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக கடந்த மாதம் மன்றுக்கு அறிக்கையிடப்பட்டு சீர்படுத்த காலஅவகாசம் வழங்கப்பட்டது. அத்துடன் உணவக உரிமையாளர் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் 40 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

எனினும் குறித்த குறைபாடுகள் நிவர்த்திக்கப்படாத நிலையில் குறைபாடுகள் தொடர்பாக நகரசபை பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மன்றில் அறிக்கையிட்டதற்கு அமைவாக குறித்த உணவகத்தைச் 'சீல்' வைத்து மூட நீதிமன்றம் கட்டளையிடப்பட்டது. (ச-26)



# கிளிநொச்சி மருத்துவமனையின் ஒரேயொரு மின்தூக்கியும் செயலிழப்பு

நோயாளர்கள் சிரமம்!

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒரேயொரு மின்தூக்கியே பயன்பாட்டில் இருந்துவந்த நிலையில் அந்த மின்தூக்கியும் கடந்த நான்கு நாள்களாக செயலிழந்துள்ளது. இதனால் நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சத்திரசிகிச்சைக்கூடம், அவசர சிகிச்சை உள்ளிட்டவற்றுக்கு நோயாளிகளை அழைத்துச்செல்வது, சிகிச்சை நிறைவுற்றதும் விடுதிகளுக்கு மீளவும் அழைத்துவருவது போன்றவற்றுக்கு இந்த மின்தூக்கி பயன்பாட்டிலுள்ளது. அதன் செயலிழப்பால் நோயாளிகளை படிக்கட்டு வழியாகப் பெரும் சிரமத்தின் மத்தியில் அழைத்துச் செல்லவேண்டியுள்ளது.

ஆபத்தான சத்திரசிகிச்சை மேற்கொண்ட நோயாளிகள், நடமாடமுடியாத நோயாளிகள் எனப் பலரும் இதனால் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். எனவே குறித்த மின்தூக்கியை சீர்செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-214,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற்கைதிகள் விடுதலை நல்லுறவுக்கான நம்பிக்கை!

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 27

**கைதிகள் விடுவிப்பு, மற்றும் விடுவிக்கப்பட்ட கைதிகளுக்கான சமூகப் பாதுகாப்பு யாவற்றையும் போர்க்கால நடவடிக்கை போன்று துரிதமாக அரசு மேற்கொள்வதன்மூலம் சமூகங்களுக்கிடையே இணக்கத்தையும் நல்லுறவையும் நம்பிக்கையையும் கட்டமைக்கமுடியும் என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவித்தார். தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினால் முன்னெடுக்கப்படும் 'விடுதலை' எனும் தொனிப்பொருளிலான போராட்டத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு, நிலம், மொழி, கலை, கலாசாரம் என்கின்ற அத்தனை அம்சங்களையும் கொண்ட பூர்வீகத்தமிழினம் இந்தத் தீவிலே சுயாதீனமாக வாழ்வதற்கு இடமளிக்கவேண்டும். அதற்கு முரண்பட்ட இரு இனங்களுக்குமிடையில் நல்லிணக்கம் மிக அவசியமாகிறது. நல்லிணக்கம் பேசுவதென்றால் இன முரண் விளைவுகளால் 16 முதல் 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகள் அல்லது போர்க் கைதிகளை நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலை செய்யவேண்டும். இரு இனங்களுக்கு இடையிலான சமூக நல்லுறவைப் பலப்படுத்துவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலை சாதகமான காரணியாகவே அமையும். எனவே சிறையில் வாடும் தமிழ் அரசியற்கைதிகளை உடனடியாகவிடுவிக்க விசேட பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச-20)

**சுத்திகரிப்பு பணியாளர் தேவை**

நிறுவனம் ஒன்றுக்கு சுத்திகரிப்புப் பணியாளர் தேவை.

இன்று பிற்பகல் 02 மணிக்குப் பின்னர்.



105, இராஜவீதி, கோப்பாய் என்ற முகவரிக்கு நேரில் வரவும்.

**வீட்டுப் பராமரிப்பாளர் தேவை**

வீடு மற்றும் தோட்டப் பராமரிப்புக்கு சுறுசுறுப்புடன் பணியாற்றக்கூடியவர் தேவை

இருபாராலும் விண்ணப்பிக்கலாம்

தேவைப்படின் தங்குமிடவசதி



தொடர்புகளுக்கு: 071 411 5000



## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவிக்கு பணப்பரிசில்

யாழ்ப்பாணம், ஜூலை 27

குறைந்த வளங்களுடன் இயங்கிவரும் யாழ்.ஏழாலை சைவமகாஜன வித்தியாலயத்தில் 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் 6 ஏ,பி,சி, எஸ் பெறுபேற்றைப் பெற்று சாதித்த மாணவி ஜெயக்குமார் பவீனா ஒரு இலட்சம் ரூபா பணப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு பாடசாலையின் பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஆசிரியர் த.ஸ்ரீகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. (ச-66)

## அருண ஜயசேகரவால் நீதி தடைப்படும்

### சமிந்த எம்.பி. சுட்டிக்காட்டு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் நடக்கும்போது கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்த அருண ஜயசேகரவே, தற்போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருக்கின்றார். நிலைமை இவ்வாறு இருக்கையில் எவ்வாறு நீதியான விசாரணையை எதிர்பார்க்கமுடியும்? என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாரா ஜஸ்மின் மாயமானார். டி.என்.ஏ. பரிசோதனையில்கூட சந்தேகம் உள்ளது. அச்சம்பவம் நடக்கும்போது கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்தவர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர. (தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர்) தனது கடமையை நிறைவேற்றத் தவறியதற்காக புலனாய்வுப்பிரிவுப் பிரதானி யாக இருந்த நிலந்த ஜயவர்தன பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

எனவே, சாராவுக்கு என்ன நடந்தது, அவர் எங்கு சென்றார் என்பது கிழக்கு மாகாணக் கட்டளைத் தளபதியாக இருந்த அருண ஜயசேகரவுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இவர் அரசாங்கத்தில் பிரதி அமைச்சராக இருக்கின்றார். அவரை அப்பதவியில் வைத்துக்கொண்டு நீதியான விசாரணையை எதிர்பார்க்கமுடியாது - என்றார். (ச-44)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

23.07.2025

DR.S.Sumana

Doctor of Philosophy
(Biochemistry & Molecular Biology),
Postgraduate Institute of Science
University of Peradeniya,
Srilanka.

எங்கள் வாழ்வின் விழா நாள் !
முதன் முறையாக
எங்கள் குடும்பத்தில்
பிறந்தநாள் ஒரு கலாநிதி !
கடந்த பாதை சுலபமல்ல
அத்தனையும் தாண்டி
உழைப்பை விதைத்து
கலாநிதி எனும் பட்டத்தை பயிராக்கி
வெற்றி மகுடத்தை சூடினாள் !
வாழ்க உன் வல்லமை !
உயர்க உன் வெற்றி !




மிக பெருமிதத்துடன்
அம்மா & அப்பா
சகோதரிகள், மைத்துனர்கள்.
N.சிவலிங்கம்
பெரியவிளான், இளவாலை

### திடீரென...

நடந்துள்ளது. பாடசாலைக் காவலாளியான சி.சிவஞானம் (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மதியம் உடை துவைத்துக் கொண்டிருந்தபோது திடீரென இவர் மயங்கி வீழ்ந்துள்ளார். வீட்டிலிருந்தவர்கள் அவரைத் தெல்லிப்பழை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டாரென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

### முதியவர்...

மீட்கப்பட்டுள்ளார். 3 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறையைச் சேர்ந்த சின்னப்பொடி நல்லதம்பி (வயது-87) என்பவரே உயிரிழந்தவராவார்.

அதிகளவு தூக்க மாத்திரைகளை உட்கொண்டதால் அவர் உயிரிழந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஒரே நாளில் விரும்பிய வாகனம்

சொகுசு SUV வாகனம், கார், வேன், பஸ் மற்றும் ட்ரெக்டர், அறுவடை இயந்திரங்கள் உட்பட விவசாய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை குறைந்த வட்டி வீதத்தில் இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.

இலகுவாக வாங்கலாம்
இலகுவாக செலுத்தலாம்
BOC லீசிங்

மேலதிக விபரங்கள் அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில்.

1975 BOC
www.boc.lk
AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


## வேலையாட்கள் தேவை

கொழும்பில் தலைமையகத்தை கொண்ட யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பங்களாவுக்கு பொறுப்புணர்வும், அனுபவமும் கொண்ட நபர் தேவை. பங்களா வாடகை மற்றும் வாகன வாடகை சேவை வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் ஓட்டுனர் அனுமதிப்பத்திரம் கொண்டவராகவும், ஆங்கிலத்தில் தொடர்புகொள்ளக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

**பணிப்பொறுப்புகள்**

- பங்களா பொது மேலான்மை
- வாகன வாடகை சேவை ஒருங்கிணைப்பு

(CS 58952) E

தகுதியானவர்கள் கீழே கொடுக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு விபரங்களையும், சுயவிபரக்கோவையையும் அனுப்பி வைக்கவும்:

**Jeya@dajlogistics.com**

## தோட்டக்காணி விற்பனைக்கு

யாழ்ப்பணம், அச்சுவேலி நகர எல்லைக்குள், பொலிஸ் நிலையம் முன்பாகவும் பெண்கள் பாடசாலை எல்லையுடனும் செல்கின்ற வீதியில் அமைந்துள்ள முப்பத்தாறு பரப்பு செம்மண் தோட்டக்காணி வற்றாத கட்டுக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு. குடிநீர் போத்தலில் அடைப்பதற்கும் சோலர் மின் உற்பத்திக்கும், வீடமைப்பதற்கும் எந்த வகையான பயிர்ச்செய்கைக்கும் ஏற்ற இடம்.

தொடர்பு: **0779 215550**

## காணி விற்பனைக்கு

மிருசுவில்

A9 கண்டி வீதிக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்

Whatsapp / Viber +33770012099

## விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
Royal Enfield Model 350 Bullet
(Black with gold stripe) 350
Classic
Metallic Silver Motorcycle
For Sale

தொடர்புகளுக்கு:
**076 708 6556**


LOLC ரன் சவி

நிதித்துறை ஜாம்பவான்
தங்கக்கடன்
Digitalமயம்
ஆகியது

இப்போது LOLC ரன்சவி
Quick top - up வசதியுடன்
உங்கள் எந்தவொரு
பரிவர்த்தனையையும்
Online செய்துகொள்ளுங்கள்




- சகல வங்கி பரிவர்த்தனைகள்
- சகல பில் கொடுப்பனவுகள்
- சகல கடனட்டை கொடுப்பனவுகள்
- சகல ஒன்லைன் கொடுப்பனவுகள்

i-pay உடன் LOLC ரன்சவி தங்கக்கடன் பரிவர்த்தனைகளை செய்துகொள்ளும் உங்களுக்கு ஒரு புதிய வாய்ப்பு

தங்கத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்தின் பலனை அதே நாளில் அனுபவிக்கும் விதமாக இப்பொழுது ipay மூலம் LOLC ரன்சவி தங்கக்கடனை Top - up செய்து எங்கும் எந்த நேரத்திலும் வரிசைகள், இடையூறுகள் இல்லாமல், மேலதிக கட்டணமோ செலவோ இல்லாமல் கடன் தொகையை அதிகரித்திடுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்: **0115 880 400**

Powered By ipay

www.lolcfinance.com

LOLC பினான்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். தெய்வ அனுகூலம் உண்டாகும். ஆனால், புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரையும். தாய் மாமன்வழியில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தாய் மாமன்வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கடகம்:** அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணத்தைத் தவிர்க்கவும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பும் அதனால் ஆதாயமும் ஏற்படும்.

**சிம்மம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப் பிடிக்கவேண்டும். மற்றவர்களுடன் வீண்வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்குக் கோயில்களுக்குச் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும்.

**கன்னி:** மனதில் இனந்தெரியாத சஞ்சலம் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். உறவினர்களுடன் பேசும்போது பதற்றம் வேண்டாம். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். தாய்வழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். மனதில் தைரியம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமை அவசியம். உறவினர்களுடன் அனுசரணையாக நடந்து கொள்ளவும். கணவன் மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால், ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், வீண்செலவுகள் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக் கூடும்.

**கும்பம்:** எதிலும் வெற்றியே ஏற்படும் நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கநேரிடும். கூடுமான வரை வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்த்துவிடவும். தந்தைவழி உறவுகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

# திறந்த பல்கலைக்கழகத்தால் கற்கைநெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முகாமைத்துவக் கற்கைகள் சிறப்புமாணிப் பட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் ஏதேனும் அடிப்படைக் கற்கைநெறியில் 60 திறமை மட்டத்தினைப் பூர்த்திசெய்திருத்தல் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தின், SLQF மட்டம் 2 இல் 30 திறமை மட்டத்தினைக்கொண்ட ஒரு உயர்தரச்சான்றிதழ் கற்கைநெறியைப் பூர்த்திசெய்திருத்தல் (தேர்வுப் பரீட்சைக்கு அமரத்தேவையில்லை) வேண்டும். அத்துடன் இலங்கை திறந்தபல்கலைக்கழகத்தினால் 24.08.2025 அன்று நடத்தப்படும் தேர்வுப் பரீட்சையிலும் சித்திபெற்றிருத்தல் கட்டாயமானது. விண்ணப்பிக்க விரும்புவோர் WWW.OT.AC.LK என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 31ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 0212223374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்புகொண்டு விண்ணப் பிக்கமுடியும் என்றும் யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

# பெண்களுக்கான நீதி கண்காட்சி

கொழும்பு, ஜூலை 27

நீதிக்காக பெண்கள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "எங்கள் கடந்தகாலமும் எதிர்காலமும் பெண்களின் நீதிக்கான தேடல்" எனும் தொனிப்பொருளிலான கண்காட்சி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமையும் 2ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 10 மணி முதல் மாலை 6மணி வரை கொழும்பு, 7 சர்வதேச பெண்கள் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

கண்காட்சியில் வடக்கு, கிழக்கு எல்லைப் பகுதிகள் மற்றும் கொழும்பிலுள்ள தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பெண்களின் நீண்டகால நீதிக்கான போராட்டங்களின் ஒலிப்பதிவுகள், புகைப்படங்கள் என்பன கலைப் படைப்பு வழியாக காட்சிப்படுத்தப்படவுள்ளன. நிகழ்வுக்கான அனுமதி இலவசம்என்றும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-159)

# நாகசதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை நாகசதுர்த்தி உற்சவம் இடம்பெறவுள்ளது. அன்றையதினம் மாலை 4மணிக்கு சிறப்புப் பூசை, அபிஷேகம் என்பன இடம்பெற்று சுவாமி வீதிவலம் வருவார். (ச-41-17)

# தென்பகுதியிலிருந்து வந்த யாசகர்கள்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இம்முறை யாசகர்களின் வருகை அதிகரித்துக்காணப்பட்டது.

தென்பகுதியிலிருந்தே கூடுதலான யாசகர்கள் வருகைதந்து கீரிமலையில் யாசகம் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-17)

# நல்லூர் ஆலயச் சூழலில் சுகாதாரக் கண்காணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் பெருந்திருவிழாவை முன்னிட்டு மாநகர சுகாதாரப் பிரிவினரின் கண்காணிப்பு மற்றும் சுகாதார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நல்லூர் ஆலயச்சூழலிலுள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டுவருகின்றன. வளர்ப்பு நாய்களுக்கு பூச்சிமருந்து, ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்துகளும் வழங்கப்படுகின்றது.

அத்துடன் ஆலயச் சூழலிலுள்ள அன்னதான மடங்களும் கண்காணிக்கப்பட்டு சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. நல்லூர்ப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சதிஷ்குமார் தலைமையிலான குழுவினர் மற்றும் டெங்குக் களப் பணியாளர்கள் ஆகியோரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (ச-41-17)

# ஆடிப்பூரம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழ்ப்பாணத்திலுள்ள பல அம்மன் ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆடிப்பூரமான நாளை திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கோப்பாய் மத்தி அருள்மிகு மகாமுத்துமாரி அம்மன் ஆலயம், அரியாலை பிரப்பங்குளம் நாச்சியம்மன் ஆலயம், கல்வியங்காடு இலங்கைநாயகி அம்மன் ஆலயம், சட்டநாதர் சிவன் ஆலயம் போன்ற ஆலயங்களிலேயே தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது. (ச-41-17)



# நல்லூர்த் திருவிழாவையொட்டி போக்குவரத்து விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 27

நல்லூர்த் திருவிழாவையொட்டி போக்குவரத்துப் பாதுகாப்பை மேம்படுத்தும் முகமாக யாழ்ப்பாணம் கெட்வே லயன்ஸ் கழகமும், வவுனியா லயன்ஸ் கழகமும், கனகராயன்குளம் பொலிஸாருடன் இணைந்து ஏ-9 வீதியில் பயணிக்கும் சாரதிகளுக்கான வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வுத் திட்டத்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுத்தன. லயன்ஸ் கழகத் தொண்டர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் வாகனங்களை நிறுத்தி, வாகன சாரதிகளுடன் கலந்துரையாடி இலவச தேநீர் மற்றும் கோப்பியை வழங்கினர். மேலும், அதிக ஓய்வு தேவைப்படுபவர்களுக்கு அதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

நல்லூர்த் திருவிழாக்காலங்களில் ஏ9 வீதியில் இரவு பகலாக போக்குவரத்துக் கணிசமாக அதிகரித்துக் காணப்படுவதால் சாரதிகளின் களைப்பு மற்றும் தூக்கமின்மையால் ஏற்படும் விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## வலி உணர்ந்தும் வதைப்பது தகுமா?

விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கம் செய்வதற்கு முனைந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த பதினாறு தமிழ் அரசியற் கைதிகள் கொழும்பு நீதிமன்றத்தால் கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பை விருத்தி செய்தல், அதன் கொள்கைகளை ஊக்கப்படுத்துதல், அந்த அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குதல், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு உடந்தையாக இருந்தல் என அவர்கள் அனைவருக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட அத்தனை குற்றச்சாட்டுகளும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. 2020ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இந்த பதினாறு பேரும், அண்ணளவாக இரண்டு வருடங்கள் பிணையற்ற சிறைத் தண்டனையை (விளக்கமறியல்) எதிர்கொண்ட நிலையில், 2022ஆம் ஆண்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர். இதைத் தொடர்ந்தே, தற்போது வழக்குகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இங்கே கவனிக்கவேண்டிய மிகமுக்கியமான விடயம் என்னவென்றால், மேற்படி பதினாறு தமிழ் அரசியற்கைதிகளுக்கும் எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்கை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் அனைவரையும் நீதிமன்றம் விடுவித்திருப்பதுதான். அவர்களுக்கு எதிரான வழக்கை விசாரிப்பதற்கு கொழும்பு நீதிமன்றத்தில் எந்த முகாந்திரமும் - சட்ட ஆளுகைப் பிடிமானங்களும் இல்லை என்பதே இதன் அடிப்படை. இதனைப் போன்றே ஏனைய, தமிழ் அரசியற் கைதிகளுக்கு எதிராக சிங்கள பேரினவாத ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் சுமத்தப்பட்டிருக்கும் ஏராளமான வழக்குகளும் எந்த முகாந்தரமும் அற்றவைதான். அத்தோடு அவையும் முகத்தோற்ற அளவில் தள்ளுபடி செய்யப்பட வேண்டியவை என்ற தமிழர் தரப்பின் நீண்டகால வலியுறுத்தல்களை மெய்ப்பிக்கும் வகையிலேயே மேற்படி பதினாறு பேருக்கும் எதிரான வழக்கு அமைந்திருக்கின்றது.

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் இன்னமும் ஏராளமான தமிழ் அரசியற் கைதிகள் உள்ளனர். வழக்கு விசாரணைகள் முழுமையாக ஆரம்பிக்கப்படாமலும், கிடப்பில் போடப்பட்டும் அவர்கள் தொடர்ச்சியாகப் 'பழிவாங்கப்பட்டே வருகின்றனர்'. அவர்கள் தொடர்பான வழக்குகள் அனைத்தும் மிக விரைவாகத் திறக்கப்படவேண்டும். வழக்குகள் நேரகாலத்துடன் நடத்தப்பட்டு, குற்றவாளிகளாக அவதானிக்கப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்கூட, இன்று பலர் சிறை மீண்டிருப்பார்கள். எனவே, முறையான நீதிமன்ற நடவடிக்கைகளை தள்ளிவைத்துவிட்டு,சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளை ஜனாதிபதி அநுர உடனடியாக பொதுமன்னிப்பிலாவது விடுவிக்கவேண்டும்.

விடுதலைப் புலிகள் மௌனித்து ஒன்றரைத் தசாப்தங்கள் தாண்டிவிட்டன. 15 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டோருக்கும், புலிகள் அமைப்புக்கும் இடையே தொடர்பு இருந்திருந்தால் கூட, அவை தற்போது தானாகவே அற்றுப்போயிருக்கும். அவர்களுடன் தொடர்புடைய வலைப்பின்னல் முற்றாக இல்லாத நிலையில், எஞ்சியிருக்கும் காலத்திலாவது அவர்கள் சமூக மயப்பட்டு வாழ்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு மனம் ஒப்பவில்லையெனில், குறைந்தபட்சம் பிணையாவது வழங்க வேண்டும். தற்போதைய அரசாங்கத்தினர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதாகி அரசியற் கைதிகளாக இருந்தவர்கள். எனவே, அதன் வலி என்னவென்று அவர்களுக்குப் புரியும். வலி உணர்ந்தும் வதைக்க முடிகின்றதெனில், வரலாறு ஒருபோதும் மன்னிக்காது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

கலங்காத உள்ளம் படைத்தவர்களே
இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.

—சுபாஷ் சந்திரபோஸ்—



## மீன்பிடித் துறையின் சவால்களுக்குத் தீர்வு



கடற்றொழில் பிரதியமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 27**
**மீன்பிடித் துறையின் பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வுகள் வழங்கும் நோக்கில் புதிய முறை வகுக்கப்படும் எனக் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார்.**

கடல் அட்டைகள், சங்குகள், இறால்கள் மற்றும் அலங்கார மீன்களைப் பிடிப்பதற்கான சுழியோடிகளுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்போது வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்வதற்காக ஒரு புதிய முறை அறிமுகப்படுத்தப்படும்.
ஒக்ரோபர் 30ஆம் திகதி முதல் விண்ணப்பங்கள் கோரப்படும் என்பதுடன், விண்ணப்பதாரர்களின் அனுபவம், படகின் உரிமை மற்றும் காப்புறுதி போன்ற விடயங்களை அடிப்படையாகக்கொண்டு, நேர்காணலுக்குப் பின்னர் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும்.
உதவி வழங்கும் திட்டங்கள் வலுப்படுத்தப்படும். செயலிழந்த மீனவர் சங்கங்கள் மீள்செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, பயிற்சி மற்றும் கடன் வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## ஆடை ஏற்றுமதி வளர்ச்சிப் பதிவு

கொழும்பு, ஜூலை 27
இந்த ஆண்டின் ஜூன் மாதம் வரையான அரையாண்டுக் காலப்பகுதியில் இலங்கையில் ஆடை ஏற்றுமதி வளர்ச்சி கண்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடும்போது 5.2% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மூலோபாயப் பன்முகப்படுத்தல் மற்றும் இலங்கைஆடைகள்மீதான வாங்குபவர்களின் நிலையான நம்பிக்கை என்பன இதற்கு ஆதரவாக அமைந்துள்ளன. (ச-இ)



## பொம்மைக்குள் போதைப்பொருள்; பெண் கைது

கொழும்பு, ஜூலை 27
பொம்மை ஒன்றுக்குள் மறைத்து சூட்சுமமான முறையில் போதைப்பொருளைக் கடத்திய பெண் ஒருவரை சீதுவப் பகுதியில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பெண்ணொருவர் குழந்தையுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் ஒரு பொம்மையை எடுத்துச்சென்ற போது சந்தேகத்தின் அடிப்படையில் பொம்மையைப் பரிசோதித்ததில் அதில் ஐஸ்,ஹெரோய்ன் மற்றும் கேரள கஞ்சா ஆகிய போதைப்பொருள்கள் மீட்கப்பட்டன.
கைதுசெய்யப்பட்டவர் கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவராவார். (ச-இ)

## 21 யானைகள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 27
அண்மைய நாள்களில் 21 காட்டு யானைகள்சுட்டுக்கொல்லப்பட்டுள்ளன என்று சுற்றுச்சூழல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். தீவின் பல பகுதிகளில் பல்வேறு காரணங்களால் காட்டுயானைகள் இறக்கும் பல சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## நாடாளுமன்றத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பம்

கொழும்பு, ஜூலை 27
நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுவருகிறது. இதன்படி, நாடாளுமன்றத்தில் ஒரு முன்னோட்டத் திட்டம் அண்மையில் நடத்தப்பட்டது. அரசாங்க நிதிக்கான குழு அதன் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் கூடிய போது இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
நாடாளுமன்ற ஹன்சார்ட் அறிக்கைகள், குழுக் கூட்டங்களின் அறிக்கைகள் மற்றும் குறிப்புகளைத் தயாரிக்கும் முறையை நவீனமயமாக்குதல் என்பன இந்த ஒரு முன்னோட்டத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டன. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை - ஆடி 12
28.07.2025
சுபநேரம் : 12.02 - 01.32
ராகுகாலம் : 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

OVER 100 YEARS OF NATION BUILDING

# வேலைவாய்ப்பு

கட்டுமானப் பொருட்களின் இறக்குமதி மற்றும் உற்பத்தியில் 100 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வரும் எமது நிறுவனம் அதன் யாழ்ப்பாணக் கிளையில் பின்வரும் வெற்றிடங்களைக் கொண்டுள்ளது.

- **Invoicing Clerk**
- **Cashier**
- **Stores Helper**

தகுதியுள்ளவர்கள் உங்கள் விண்ணப்பங்களை கல்வித் தகுதி, வேலை அனுபவம் என்பவற்றைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு மின்னஞ்சல்/தபால் மூலம் இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குள் அனுப்பவும், அல்லது தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

**N. Vaitilingam & Co. (Pvt) Ltd.**
**No. 70, K Cyril C Perera Mawatha,**
**Colombo – 13.**
**Tel :- 0112433143/4/5**
**Email :- careers@nvclgroup.com**

# அலங்காரத் திருவிழா

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி கண்டாவளை நாதன் குடியிருப்பு நந்தவன நாகபூசணி அம்பாள் கோவில் ஆடிப்பூர அலங்காரத் திருவிழா கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது. ஆடிப்பூர தினமான நாளை திங்கட்கிழமை விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறும். திருவிழாக் கிரியைகள் சிவஸ்ரீ நா. லிங்கேஸ்வர சர்மா தலைமையில் நடைபெறும்.

(ச-25,9)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 43 வயது திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை
தொடர்புகளுக்கு:
**077 905 8615**

# மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 34 வயது மூலம் நட்சத்திரம் 5'7" உயரமுடைய கனடாவில் வசிக்கும் சொந்த வியாபாரம் செய்யும் மணமகனிற்கு உள்நாட்டில் பொருத்தமான மணமகள் தேவை.

யாழ் இந்து கௌரவ குடும்பம் 29 வயதுடைய பூசம் (செவ்வாய்) நட்சத்திரம் கொழும்பில் பொறியியலாளராக கடமையாற்றும் மணமகனுக்கு உள்நாட்டு மணமகள் தேவை.

**சிறி நாகபூசணி கல்யாண மாலை**

**077 519 1133**

(CS/58956) J-1

## Exciting Job Opportunity for Accountancy Professionals! Join a leading UK Accounting Firm now expanding its team in Jaffna!

We established our Jaffna branch some time ago and are recruiting additional staffs to enhance our dynamic team.

**Candidate Educational Qualifications and Skills Required:**

- An undergraduate degree in the accountancy field.
- Partial qualifications in AAT, CIMA, ACCA, or a related professional field.
- Experience in a UK accountancy practice is desirable.
- Proficiency in both English and Tamil languages.




Wages : We offer a competitive salary package based on qualifications and experience.
Office Location : Jaffna,Sri Lanka
Working Hours : Monday to Friday - Shifts available: 10 am to 7 pm or 12 pm to 9 pm.
How to Apply : Please send your CV and cover letter to agaaccrecruitments@gmail.com
Application Deadline : 10th Aug 2025

(CS/915) J-1

26 YEARS OF EXCELLENCE IN STUDENT PLACEMENT

உங்கள் வெளிநாட்டு கனவை நனவாக்கிக் கொள்ள Edlocate உடன் இணைந்து கொள்ளுங்கள் !

# STUDY ABROAD DAY IN JAFFNA



SCHOLARSHIPS FOR HIGH ACHIEVERS*

ENTRANCE FREE

*T&C APPLY

02ND AUG | 09.30AM 04.30PM

UNIVERSITY OF JAFFNA [ Arts Seminar Hall ]

Australia | New Zealand | Canada | England | Ireland

- PROCESS YOUR APPLICATION WITH US FOR 2026 INTAKES
- FOUNDATION | DIPLOMA | DEGREE | MASTERS | PHD

Follow Us On

edlocate Reach Light Beyond Borders www.edlocate.lk

முற்பதிவுகளை மேற்கொள்ள: 077 222 3178

DAG CLOTHING

# விற்பனை நிர்வாகி வெற்றிடங்கள்

## இணைந்துகொள்ளுங்கள்

டீஜீ எப்பரல் பிரைவட் லிமிடட் - ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு சந்தைக்கான முன்னணி உள்ளாடை உற்பத்தியாளர்களான இந்த நிறுவனம் எங்களது வளர்ந்து வரும் குழுவில் சேர்த்து கொள்வதற்கு துடிப்பான மற்றும் அனுபவம் வாய்ந்த விற்பனை நிர்வாகிகளை தேடுகின்றது.

**வெற்றிடங்கள் உள்ள இடங்கள்**

- ✔ மேல் மாகாணம் - களுதரை / ஹொறனை / கொழும்பு /
- ✔ வட மாகாணம் - வவுனியா / யாழ்ப்பாணம் குருணாகல் மாவட்டம்
- ✔ கிழக்கு மாகாணம் - மட்டக்களப்பு / திருகோணமலை / அம்பாறை

**தேவையான தகைமைகள்**

- விற்பனை துறையில் இரண்டுவருட அனுபவம் (ஆடை / FMCG விரும்பத்தக்கது)
- நல்ல தொடர்பு மற்றும் தனிப்பட்ட திறமை
- சுயாதீனமாக வேலைசெய்து இலக்குகளை அடைந்துகொள்ளும் திறன்
- பொறுப்பு சாட்டப்பட்ட பகுதிகளுக்கு பயணிக்கும் விருப்பம்

**நாம் வழங்குகின்றோம்**

- ✔ மொத்த வருவாய் திறன்: 100,000 + (அடிப்படை + கமிஷன்)
- ✔ உணவுக் கொடுப்பனவு
- ✔ தங்குமிட கொடுப்பனவு
- ✔ கடினநிலை கொடுப்பனவு

## இன்றே விண்ணப்பிக்கவும்

உங்களது சுய விபரக்கோவையை அனுப்பிவைக்கவும்
**careers@dag-apparel.com**


அஞ்சல் முகவரி -
**1st Floor-104, Se Saya Poshtel and Bistro,**
**No.1090, Sri Jayawardenepura Kotte**
எமது வலைத்தளத்தை பார்வையிடவும் : **www.dag.lk**

டீஏஜீ எப்பரலின் ஒரு பகுதியினராக இருங்கள்

இலங்கையின் நம்பகமான தரமான உள்ளாடை உற்பத்தியில் ஒன்று

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எவ். தாளத்துக்கு ஆடுகிறது அரசாங்கம்



## சாடுகின்றார் எதிர்க்கட்சித் தலைவர்

**கொழும்பு, ஜூலை 27**
**சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து, அவ்வமைப்பின் தாளத்துக்கேற்ப ஆடும் கைப்பாவையாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாறிவிட்டது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மின்சாரக்கட்டணம் குறைக்கப்படும் எனத் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்திருந்தது. ஆனால் தற்போது மின்சாரக்கட்டணம் அதிகரித்துள்ளது.
சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் மாற்றியமைக்கப்படும் எனவும், விவசாயிகள் பாதுகாக்கப்படுவார்கள் எனவும், மக்களின் வாழ்க்கைச்சுமை குறைக்கப்படும் எனவும் அரசாங்கம் உறுதியளித்திருந்தது.
ஆயினும் உறுதிமொழிகளை மறந்து, சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து, அவ்வமைப்பின் தாளத்துக்கேற்ப ஆடும் கைப்பாவை அரசாங்கமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மாறியுள்ளது. அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைக்கு எதிராக நாம் முன்னிலையாவோம்- என்றார். (எ-44)

# புலிகளை ஒழித்த எமக்கு பாதாளக்கும்பல் தூசியே!

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
இந்த நாட்டில் இயங்கிய 35 ஆயிரம் புலிகளை எம்மால் இலகுவாக ஒழிக்கமுடியும் என்றால் வெறும் ஆயிரத்து 500 பேர் கொண்ட பாதாளக் குழுக்களை ஒழிப்பது அவ்வளவு கஷ்டமல்ல என்று பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
பாதாளக்குழுக்களை ஒழிப்பது ஒன்றும் பெரிய காரியமல்ல. சட்டரீதியாகப் போய் இவர்களை முடிக்க முடியும். இதற்காக பொறுப்புக் கொடுக்கப்பட்டுள்ள நிறுவனத்தை முதலில் பலப்படுத்தவேண்டும். அதைச் சுத்தப்படுத்தவேண்டும்.
அதில் உள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும், ஊழல், மோசடிகள் அதில் இருக்கக்கூடாது. இதையெல்லாம் செய்துவிட்டே வேலையில் இறங்கவேண்டும். பொலிஸ் அதிகாரிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் பாதாளக் குழுக்களுடன் தொடர்புபட்டிருப்பது தெரியவந்துள்ளது. இதையெல்லாம் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தால் பாதாளக் குழுக்களை இலகுவாக அழித்துவிடலாம். குறுகிய காலத்திற்குள் முடித்துவிடலாம் - என்றார் . (ச-75)

# பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கு உறுப்பினர் உள்ளீர்ப்பு

கொழும்பு, ஜூலை 27
பகிரங்க சேவை ஆணைக்குழுவில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகைமைகளைக் கொண்டுள்ள தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இதற்கான விண்ணப்பங்களை www.parliament.lk எனும் இலங்கை நாடாளுமன்ற இணையத்தளத்தில் 'பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல் (ப.சே.ஆ)' என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்துக்கேற்ப தயாரித்து எதிர்வரும் ஓகஸ்ட் 1 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும்.
விண்ணப்பங்களை, அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம், அரசியலமைப்புப் பேரவை அலுவலகம், இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (ச-25)

# அரசாங்கத்தின் அச்சுறுத்தலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி பணியாது!

## முஜிபூர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27
அரசாங்கத்தின் அச்சுறுத்தல்களுக்கு அடிபணிந்து தமது பயணத்தை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் நிறுத்தப்போவதில்லை. பிரதான எதிர்க்கட்சிக்குரிய பொறுப்பு உரியவகையில் நிறைவேற்றப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்துவதற்குரிய அரசியல் சூழ்ச்சியை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது. அரசாங்கத்தின் வீழ்ச்சிப் பயணம் ஆரம்பமாகியுள்ளதாலேயே எதிரணியைப் பலவீனப்படுத்துவதற்குரிய திட்டம் அரங்கேற்றப்பட்டுவருகின்றது. இதன் ஓர் அங்கமாகவே எதிர்க்கட்சித் தலைவரை இலக்குவைத்து விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.
அதாவது எதிரணி பலவீனம் அடைந்தால் தமது இருப்புக்கு ஆபத்து வராது என அரசாங்கம் கருதுகின்றது. விசாரணைக் குழுக்களை அமைப்பதால் எதிர்க்கட்சித் தலைவரின் பயணத்தைத் தடுக்கமுடியாது. அரசுக்கு அடிபணிந்து எமது அரசியல் பயணத்தை நிறுத்தப்போவதில்லை - என்றார். (எ-44)

# சூட்டுச் சம்பவ சூத்திரதாரி துப்பாக்கிச்சூட்டில் மரணம்


கொழும்பு, ஜூலை 27
தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று சந்தேகிக்கப்படும் துப்பாக்கிதாரி, கஹதுடுவ, பஹலகம என்ற இடத்தில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினருடன் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.
சந்தேகநபர் கைவிடப்பட்ட வீடொன்றில் மறைந்திருந்தபோது நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர். சந்தேகநபருக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினரின் அதிகாரி ஒருவரும் காயமடைந்தநிலையில் அவர் களுபோவில மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
கடந்த 18 ஆம் திகதி தெஹிவளை ரயில் நிலையத்துக்கு அருகில் துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரைக் கொலை செய்ய முயற்சித்த துப்பாக்கிதாரியே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)



# யாழ். பழைய கச்சேரி சீரமைப்பு உலக வங்கியினர் களவிஜயம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27
மரபுச் சுற்றுலா மேம்பாடு மற்றும் தொடர்ச்சியாகப் பேணுதல் என்ற அடிப்படையில் யாழ்ப்பாணம் பழைய கச்சேரியைப் புனரமைப்புச் செய்தல் தொடர்பாக யாழ்.மாவட்டச் செயலர் ம.பிரதீபனுடன் உலக வங்கிப் பொருளாதார நிபுணர் குழுவினர் கடந்த திங்கட்கிழமை பழைய கச்சேரியைப் பார்வையிட்டு ஆராய்ந்தனர்.
வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையிலான உட்கட்டுமானம் மற்றும் சுற்றுலாத் துறையினை விருத்தி செய்தல் தொடர்பில் ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக கடந்த இரு மாதங்களாக உலக வங்கிக் குழுவினர் வடக்கின் பல பகுதிகளுக்கும் சென்று சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் செயற்றிட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-25,66)

# யாழில் பலத்த காற்றால் வீட்டின்மீது வீழ்ந்த மரம்



யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்ப்பாணத்தில் கடந்த வியாழக்கிழமை வீசிய பலத்த காற்றுக் காரணமாக வீடு ஒன்றின்மீது தேக்கு மரம் முறிந்து விழுந்ததால் வீட்டின் கூரை பகுதியளவில் சேதமடைந்துள்ளது.
இருப்பினும் உயிர்ச் சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்துள்ளார். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் கல்லூரிக் கற்கை விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.தாதியர் கல்லூரிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. சுகாதார மற்றும்வெகுஜன ஊடக அமைச்சின் உத்தியோகபூர்வ www.health.gov.lk இணையத்தளத்தினூடாக மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்திசெய்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் ரூபா 1000 பணத்தை இலங்கை வங்கி, தப்ரோபேன் கிளையின் இலக்கம் 7041318 எனும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரின் பரீட்சைக் கட்டணம் அறவிடல் கணக்குக்குச் செலுத்தவேண்டும். அதற்காக பெறப்பட்ட பற்றுச்சீட்டின் அச்சிடப்பட்ட இலக்கத்தை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் உள்ளிட்டுத் தங்கள் விண்ணப்பத்தை இணையவழி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி கட்டணம் செலுத்தியதற்கான ஆதாரத்தை பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் அதன்போது அதனைக் கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி உயர்தரத்தில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) முழுநேரக் கற்கைநெறியான இதன் காலம் 3 வருடங்களாகும். கற்கைநெறியை ஆங்கிலத்தில் தொடர்தல் வேண்டும். 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உயரம் 4 அடி 10 அங்குலத்துக்குக் குறையாதிருத்தல், திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(ச-25)


## வீடு விற்பனைக்கு

**5 அறைகள், 2 வரவேற்பறை, 1 சாப்பாட்டு அறை, 1 சமையல் அறை, 2 குளியல் அறை கிணற்றுடன் சகல வசதியுடன் 3 பரப்பிலுள்ள வீடு விற்பனைக்கு உண்டு.**

- அருணோதயன் கல்லூரி, மகாஜனக்கல்லூரிகளின் வலையத்திலும்
- கும்பளாவலை கோயில், துர்க்கை அம்மன் கோயில் அழகொல்லை கோயில்களுக்கு அருகாமையில் உள்ளது.

பலாலி சர்வதேச விமான நிலையத்திற்கும், K.K.S பயணிகள் துறைமுகத்திற்கு 8Km தூரத்தில் உள்ளது.
தொடர்புகளுக்கு:
**077 756 3745**
(CS/58972) J-1

## வேலையாட்கள் தேவை

தென்மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடையொன்றில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.
சம்பளம்:- 70000
Location:- Hambantota
தொடர்புகளுக்கு: **077 480 3379**

## வேலைவாய்ப்பு

தச்சுவேலை :- 70000/=
Technical Officer :- 60000/=
Bill Clerk :- 50000/=
முழு நேர / பகுதி நேர வேலைவாய்ப்பு
இடம் :- யாழ்ப்பாணம்
**076 821 9414**

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 3/4 Km தூரத்தில் பரப்பு 15 1/2 இலட்சம். 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
**077 446 0241**

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Wealth Planner | : 0769244235 |
| கைவினை கலைஞர்(பெண்கள்) | : 0760764565 |
| Marketing Coordinator | : 0772741206 |
| DSR, Bike Store room Manager | : 0770460096 |
| Branch Manager | : 0740178417 |
| Waiter | : 0777111831 |
| Kitchen Helper | : 0775527937 |
| தொழிலாளர்கள்(அப்பள தொழிற்சாலை) | : 0777741195 |
| மருந்தக உதவியாளர்கள் | : 0765826025 |
| Accounts Officer(Trainee) | : 0772741206 |
| Store Keeper(Male) | : 0777110075 |
| Fashion Model | : 0770280224 |
| பெண் உதவியாளர்கள் | : 0766397826 |
| Sales Manager(Basic 90,000) | : 0779969661 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா : 0760984532
**DEWMAS**, 51, Amman Road, Nallur


# கும்பாபிஷேக மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 27
யாழ்.ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் மகா கும்பாபி ஷேக சிறப்புமலர் ஆலய மண்டபத்தில் கடந்த வாரம் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஆலயத்தின் போசகர் பரா.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.பிரதேச செயலகக் கணக்காளர் சிறீதரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு கும்பாபிஷேக மலரை வெளியிட்டுவைத்தனர்.
(ச-17)


## பணிப்பெண் தேவை

கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கிநின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை.
(CS/58584) J-1
077 979 6593, 075 639 8165


# அலங்காரத் திருவிழா

யாழ்., ஜூலை 27
உரும்பிராய் தெற்கு செல்வபுரம் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்பாள் திருக்கோவில் விசுவாவசு வருஷ அலங்கார உற்சவம் கடந்த 19ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது. இன்று ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், நாளை திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன.
(ச-41)


## காணி விற்பனைக்கு

**அளவெட்டி தெற்கில் பெருமாக் கடவை கோயில் ஒழுங்கையில் இரண்டாம் காணி விற்பனைக்கு உண்டு.**
**பரப்பு - 6 1/2**
**076 282 2904, 077 714 6661**

## சிறுகுறிஞ்சா இலை தேவை

மருந்துப் பொருட்களின் உற்பத்திக்கும் மருத்துவ ஆய்வுத் தேவைகளிற்காகவும் பெருமளவில் சிறுகுறிஞ்சா (Gymnema Lactiferum) இலை தேவை. சிறிய அளவினேலும், தொடர்ச்சியாக வழங்கக் கூடியவர்களும் தொடர்பு கொள்ளவும். விலை 1Kg-100/= அதிக பராமரிப்புத் தேவையற்ற சிறுகுறிஞ்சாக் கன்றுகளை தோட்ட நிலங்களின் வேலியோரம் நாட்டி தொடர்ச்சியாக வழங்கக் கூடியவர்கள் தங்களை பதிவு செய்யலாம். உற்பத்தி செய்யப்பட உள்ள கன்றுகள் விவசாயிகளுக்கு விலைக்கு வழங்கப்படும்.

தொடர்பு: **077 805 2520**

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

தோற்றம்
31 • 03 • 1931



மறைவு
30 • 06 • 2025

### அமரர் சிதம்பரப்பிள்ளை சந்திரசேகரம்

**(ஓய்வு பெற்ற அதிபர் - சரஸ்வதி வித்தியாலயம் - கரவெட்டி)**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (30.07.2025) புதன்கிழமை அதிகாலை 04.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனிததீர்த்தக்கரையில் அஸ்தியானது கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

[illegible] வீதி,
[illegible]வெட்டி மத்தி, கரவெட்டி.
(CS/58970) J-1
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேசங்களில் ஆசிரியர் பற்றாக்குறை!

## ஆளுநர் நடவடிக்கை எடுக்குக ஆசிரியர் சங்கச் செயலர் சுட்டிக்காட்டு



கிளிநொச்சி, ஜூலை 27

வன்னி மாவட்டத்தில் குறிப்பாக கிளிநொச்சி, துணுக்காய் கல்வி வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதுடன் கல்வி வளங்களும் சீரின்றிக் காணப்படுகின்றன என்று ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிமனைக்கு நேற்று முன்தினம் விஜயம் ஒன்றை மேற்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கு இங்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவு கின்றது. கிளிநொச்சி வலயத்தில் மாத்திரம் 75 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். ஆனால் 35 புதிய ஆசிரியர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். அதுமாத்திரமின்றி கல்வியை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கான வளங்களும் பற்றாக்குறையாக உள்ளன.

இதனை நிவர்த்தி செய்வதற்கான முழுமையான அதிகாரங்கள் வடமாகாண ஆளுநருக்கே வழங்கப்பட்டுள்ளன. எனவே இதற்கான உரிய தீர்வை உடன் வழங்கவேண்டும் - என்றார். (ச-113)

THE ROYAL COLLEGE OF JAFFNA

தனியார் கல்வி நிறுவனம், சங்கானை.
2025, Batch O/L மாணவர்களுக்கான வினாவிடை
அலகு ரீதியான பரீட்சைகள் சிறந்த ஆசிரியர்கள் மூலம்
சிறு குழுக்களாக நடைபெறுகின்றன.
சங்கானை பேருந்து நிலையம் அருகில்.

Tel: 077 675 1649

JAFFNA COLLEGE, VADDUKODDAI
ADMISSION – 2026
முதலாம் தரத்திற்குரிய
புதிய மாணவர்களை அனுமதித்தல்


1. முதலாம் தரத்திற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கும் மாணவன்/மாணவி 01.02.2021 இற்கும் 31.01.2022 இற்கும் இடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்கள் -
   - 28.07.2025 திங்கட்கிழமை முதல் 07.08.2025 வியாழக்கிழமை வரையும்
   - 18.08.2025 திங்கட்கிழமை முதல் 25.08.2025 திங்கட்கிழமை வரையும்,

   கல்லூரி அலுவலகத்தில் பாடசாலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
3. எமது பாடசாலைக்குரிய விண்ணப்பப்படிவங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். ஒரு விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணம் 1000/=.
4. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 29.08.2025 வெள்ளிக்கிழமை ஆகும்.
5. விண்ணப்பப் படிவங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்குப் பூரணமாகவும், பிழையின்றியும் நிரப்பப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட முடிவுத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
6. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூலப்பிரதியும், ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்படல் வேண்டும்.
7. நேர்முகப் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை
(CR/45631) J-1

13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 . 06 . 1944
உதிர்வு 21 . 07 . 2012



அமரர் நாகலிங்கம் தியாகராசா
திதி: திருதியை
என்றும் உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், மகன் - தி. வைதந்தவாசன்
(CS 55880) N-1)



புங்குடுதீவு கண்ணகை அம்மன் என வழங்கும் இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்

ஆடிப்பூர விழா

அம்பிகை அடியார்களே!

எதிர்வரும் 28.07.2025 திங்கட்கிழமை காலை 07.30 மணிக்கு நித்திய அபிஷேகம் பூஜை இடம்பெறும். அதனைத்தொடர்ந்து காலை 10 மணிக்கு எழுந்தனி அம்பாளுக்கு பால் குட அபிஷேகமும் ஸ்நபனாபிஷேகமும் இடம்பெறும்.

தொடர்ந்து மதியம் 12 மணிக்கு வசந்த மண்டபத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீராஜேஸ்வரி அம்பாளுக்கு விஷேட பூஜையும் தொடர்ந்து அம்பாள் வீதி உலாவரும் காட்சியும் இடம்பெறும். மதியம் 1 மணிக்கு மஹேஸ்வர பூஜை ஆகிய அன்னதானம் இடம்பெறும். அடியார்கள் அம்பாளை தரிசித்து இஸ்ட சித்திகளை பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.


குறிப்பு:- காலை 09.30 மணிக்கு கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து பால்குடம் எடுக்கும் வைபவம் இடம்பெறும்.

ஆலய நிர்வாகம்
(CS 58966) E



ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற
அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?
- மனதில் நிம்மதி இல்லையா?
- வாழ்வில் நிம்மதி இல்லையா?



அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/16, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- 077 281 1234

We're Hiring:
Remote Tekla Steel Detailer

Looking for an experienced Tekla Detailer to join our Team on a remote/work-from-home basis. The role involves handling the full scope from 3D modelling to fabrication drawings.

Requirements:
- Proficient in Tekla Structures
- Capable of delivering detailed shop drawings from models
- Familiar with Australian stadards (preferred)
- Must be reliable and detail-oriented

If you're interested, please email your CV or portfolio to
skandadrafting@gmail.com
(CS 58057) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனையாளர்கள் மன்னாரில் கௌரவிப்பு

மன்னார், ஜூலை 27

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் சர்வதேச ரீதியில் சாதனைபுரிந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு, பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் எஸ். சந்தியாகு தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் இளையோருக்கான ஒலிம்பிக்போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களான ஓ.சமிசன் பர்னாந்து, ஏ.பிரைசன், ரி. டனுமிதன், சி.டடிசன், ஜூனியர் கெமிஸ்ட்ரி ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேச ரீதியாக 80 நாடுகளுடன் போட்டியிட்டு மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட மாணவன் எஸ்.அரோன் டியோறி , தேசிய மட்டத்தில் ஆங்கிலப் போட்டியில் கட்டுரை எழுதுதல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஆறாம் தர மாணவன் வி. திவ்யன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ச-25,56)



# யாழ். போதனாவுக்கு மருத்துவ உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான தவம் தம்பிப்பிள்ளை, யாழ். போதனா மருத்துவமனையின் இரத்தநாள அறுவைச்சிகிச்சைப் பிரிவு, மருத்துவ இமேஜிங் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திச் சிகிச்சையளிக்கும் சிறப்பு மருத்துவப் பிரிவு ஆகியவற்றிற்குப் பல இலட்சம் ரூபா பெறுமதியான விசேட மருத்துவ உபகரணங்களைக் கையளித்தார். யாழ். போதனா மருத்துவமனையில் வைத்து மருத்துவமனை நிர்வாகத்தினரிடம் குறித்த மருத்துவ உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (ச-25,66)



சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா கடந்த புதன் கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. (ச-9)





முன்னை நாள் துணுக்காய் பிரதேச செயலாளர் அமரர் நா.நந்தகுமார் நினைவாக இரத்ததான நிகழ்வு துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலாளர் ராமதாஸ் ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் ஸ்ரீஜெயராம் நித்தியா மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், பிரதேச இளைஞர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-25, 35)



போசணை மாதத்தை முன்னிட்டு "ஆரோக்கியமான உணவு எமது உரிமை" என்ற தொனிப்பொருளில் கண்டாவளைப் பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் ஏற்பாட்டில் விழிப்புணர்வுக் கண்காட்சி அண்மையில் பரந்தன் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் பங்களிப்புடன் குறித்த கண்காட்சி முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல உத்தியோகத்தர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)



மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சியம்பாள் ஆலயத்தின் நான்காவது வருடாந்த மஹோற்சவத்தின் ஆறாம் நாள் திருவிழா கடந்த புதன்கிழமை சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது. இதன்போது புதிதாக செய்யப்பட்ட கைலாச வாகனத்தில் பேச்சி அம்பாள் எழுந்தருளினார். (ச-100)

# அந்தோனியார் கல்லூரி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 27

2025ஆம் ஆண்டுக்கான மாகாணமட்ட ரீதியிலான உடற்பயிற்சிப் போட்டியானது மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி முதலாம் இடத்தையும், இளவாலை ஹென்றிஸ் கல்லூரி இரண்டாவது இடத்தையும், வசாவிளான் மத்திய கல்லூரி மூன்றாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ச-41-27)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஒவ்வொரு அம்சத்திலும் ஆடம்பரத்தின் சாயலைக் கொண்டுள்ள உலகத்தில் கால்பதியுங்கள். ஷெரின் விலாஸ், சாதாரண இருப்பிடத்திற்கு அப்பாற்பட்ட இல்லமாகும். நேர்த்தியான கட்டிடக்கலை, முதற்தர முடிவுறுத்தல்கள் மற்றும் விருப்பத்திற்கமைய பிரத்தியேக தடாகங்களுடன் தனி வாழ்வியலுக்கென வடிவமைக்கப்பட்ட இல்லங்களாகும். யாழ் நகரிலிருந்து சில நிமிட நேரத்திலும், கடற்கரையிலிருந்து நடந்து செல்லும் தூரத்திலும் அமையப்பெற்ற இந்த இல்லங்களில் அசல் ஆடம்பரம் வாழ்கின்றது.

ரூ.55 மில்லியனில் இருந்து தொடங்குகிறது

முன்பதிவுகளுக்கு 5% மட்டுமே +3 இலகுவான கட்டணத் திட்டங்கள்

Type A – 3 bedrooms, 2,184 sq. ft. | Type B – 4 bedrooms, 2,551 sq. ft.
Type C – 4 bedrooms, 2,454 sq. ft. | Type D – 4 bedrooms, 2,475 sq. ft.

+94 77 818 8081 | +44 78 0109 9741 www.beachsideresorts.lk/serenevilla/

கைத்தொழில் துறையில் மின்னியல் தீர்வுகளை வழங்கும் முன்னோடிகளுடன் இணைந்திடுங்கள் பதவி வெற்றிடங்கள் - சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தர்

**இலங்கையின் கைத்தொழிற்துறையில் 60 வருடங்களுக்கும் மேலாக மின்னியல் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடிகளாகத் திகழும் Rotax (pvt) Ltd உடன் இணைந்திடுங்கள்**

# சந்தைப்படுத்தல் நிறைவேற்று உத்தியோகத்தர்



## யாழ்ப்பாணம்

### தகைமைகள்

- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது தொடர்புடைய துறைகளில் சான்றிதழ் அல்லது டிப்ளோமா தகைமையைப் பெற்றிருத்தல்.
- குறிப்பிட்ட துறையில் 2 வருட கால அநுபவம் உடையவராக இருத்தல்.
- தொடர்பாடல் துறையில் சிறந்த ஆற்றல், பொதுமக்களுடன் சிநேகபூர்வமான முறையில் தொடர்பாடல் மற்றும் கணினி அறிவினைப் பெற்றிருத்தல்.
- செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தைக் கொண்டிருத்தல்.

### பொறுப்புகள்

- சேவை பெறுநர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துதலும், அத்தொடர்புகளை சிறந்த முறையில் பேணுதலும்
- நுகர்வோரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மின்சார உற்பத்திகள் மற்றும் தீர்வுகளை ஊக்குவித்தலும், விற்பனை செய்தலும்.
- ஒப்படைக்கப்பட்டுள்ள விற்பனை இலக்குகளை அடைந்து கொள்ளுதல்.
- சேவை வழங்குநர்கள் மற்றும் பிரதான பங்குதாரர்களுடன் உறுதியான மற்றும் நீண்டகால தொடர்புகளைப் பேணுதல்.
- தொழிநுட்ப மற்றும் கருமமாற்றல் குழுக்களுடன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளின் போதும் அதன் பின்னரும் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- தயாரிப்பு அறிவு, தொழிற்துறைப் போக்குகள் மற்றும் போட்டியாளர்களின் செயற்பாடுகள் குறித்து புதுப்பிக்கப்பட்ட தகவல்களுடன் இருத்தல்.

**APPLY NOW!** இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 14 நாட்களுக்குள், உங்களது விண்ணப்பங்களை careers@rochegroup.lk என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Rotax Limited
A World of Industrial Electrical Solutions

பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிருவாகம்
**Rotax (Pvt) Limited**
332, காலி வீதி, கொழும்பு - 04
0112 556 750 | WhatsApp: 0762 205 800
www.rotaxltd.com

skills

# சிறுநீரகம் தேவை

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக O+ இரத்தவகை கொண்ட சிறுநீரகம் தேவைப்படுகின்றது. உதவ விரும்புவோர் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**077 476 7400**

VISION CARE
OPTICAL SERVICES

# PolarSun
POLARIZED SUNGLASSES



கண் கூச்சத்தை தடுத்து
அழகிய தோற்றத்தை தரும்
Polarized Sunglasses

**ரூ. 7500/-** இலிருந்து!

யாழ்ப்பாணக் கிளை - 0212 221 808

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நிர்வகிக்கப்படுகின்ற இளைஞர் கழகங்களுக்கான கரைச்சிப் பிரதேசத்துக்குரிய இளைஞர் கழக சம்மேளனத்தின் 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத்தெரிவுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரைச்சிப் பிரதேச செயலகக்கேட்போர் கூடத்தில் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஜெ.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது. (ச-113)



மாமுனை ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோயில் சாந்திக அலங்கார உற்சவப் பெருவிழாவின் 7ஆம் நாள் உற்சவமான மாம்பழத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (எ-41-100)



அமரர் வே.சபாபதிப்பிள்ளை (வரணி இயற்றாலை) ஞாபகார்த்தமாக க.பொ.த. உயர்தரம்-2024, க.பொ.த. சாதாரண தரம்-2024, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகியவற்றில் உயர் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வரணி இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அமரரின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் சிறுதொகைப் பணமும் நினைவுச்சின்னமும் வழங்கி மாணவர்களைக் கௌரவித்தனர். (எ-41-159)



பருத்தித்துறை சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அன்று மாலை பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து இரவு பர்வதவர்த்தனி அம்பாள் இடப வாகனத்தில் எழுந்தருளினார். (ச-25,100)



சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பணிப்புலம் பண்மக்கள் இலவசக் கல்விக்கூடத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா பண்மக்கள் இலவசக் கல்விக்கூடத்தின் தலைவர் த.றஞ்சனின் தலைமையில் இடம்பெற்றது.

இலவசக் கல்விக்கூடத்தின் கொடையாளர்கள் கௌரவிப்பு, மாணவர்களுக்கான பரிசில் வழங்கல், இலவசக் கல்விக்கூட மாணவர்களின் கலைநிகழ்வுகள், சிந்து நடைக்கூத்து என்பனவும் இடம்பெற்றன. (எ-41-20)



இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வு தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பேராசிரியர் க.தேவராஜா, ஆசிரியர் இரா.அருட்செல்வம் ஆகியோர் வாழ்த்துரையையும், அதிபர் திருமதி கமலராணி கிருஷ்ணபிள்ளை உரையையும் நிகழ்த்தினர். தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகளாக மாணவர்களின் ஆங்கிலப் பாடல்கள், கவிதை, கதை கூறல் போன்றன இடம்பெற்றன. (எ-41)



உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு புலம்பெயர் நண்பர்களின் நிதியுதவியுடன், கிளிநொச்சி 19ஆவது கட்டை பல்லவராயன் கட்டு முழங்காவில் கிராமத்திலுள்ள ஐந்து மாணவர்களுக்குப் புதிய சைக்கிள்களை கடந்த சனிக்கிழமை வழங்கியது. (எ-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குளாய்...

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் கடற்றொழிலுக்கு 5 பேர் சென்றுள்ள நிலையிலேயே ஒருவர் காணாமற்போயுள்ளார். அவர் கடலில் இறங்கிய போது காணாமல் போயுள்ளார் என்று கூறப்படுகின்றது.

கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபடும் பொன்னம்பெருமகேஜெகான்நதிஅருண் என்னும் 23 வயது இளைஞனே காணாமற்போயுள்ளார். (அ-எ-35)

## 46 சான்றுப்...

பட்டுள்ளன. செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப்புதைகுழியில் முதற்கட்டமாக 9 நாள்கள் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாகத் தற்போது 21 நாள்களாக அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அகழ்வு நடவடிக்கைகளில் மீட்கப்பட 46 சான்றுப் பொருள்கள் நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டுக் கட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளன. (அ-எ-26)

## சர்வதேசப்...

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன அழிப்புக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஊடான விசாரணைகள் உடன் மேற்கொள்ளப்படவேண்டும், இனப்படுகொலை தொடர்பான விசாரணை நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படாமல் உடன் மேற்கொள்ளப்படல் வேண்டும், தமிழர்களுக்கு எதிராக இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்பு உள்ளிட்ட குற்றங்களை விசாரிக்கவும் குற்றவாளிகளை விசாரணைக்கு உட்படுத்தவும் ஒரு சர்வதேச குற்றவியல் நீதித்துறை அமைப்பை உருவாக்கவேண்டும் என்று கவனவீர்ப்புப் போராட்டங்களில் வலியுறுத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

செம்மணிப் புதைகுழிக்கு அண்மித்த பகுதியில் நல்லூர் வீதி வளைவு அமைந்துள்ள பகுதியில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தியவாறு, இனப்படுகொலைக்கு நீதி வேண்டி கோஷங்களை எழுப்பினர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூகமட்ட அமைப்பினர், பொது மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்தி ரன், வலி.கிழக்கு பிரதேசசபைத் தவிசாளர் தி.நிரோஷ், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் செயற்பாட்டாளர் மு.கோமகன் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

**வவுனியா**

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதேவேளை சர்வதேசநீதிப் பொறி முறையை வலியுறுத்தி கையெழுத்துக்களும் சேகரிக்கப்பட்டன. வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், வவுனியா மாநகரசபை முதல்வர் சு.காண்டீபன், வவுனியா தெற்கு பிரதேச சபைத் தலைவர் பா.பாவேந்திரன், செட்டிக்குளம் பிரதேசசபையின் உபதவிசாளர் சி.ஜெகன், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், அரசியற்கட்சி உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், கரைதுறைபற்றுப் பிரதேச சபைத் தவிசாளர் லோகேஸ்வரன், வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அ.லவகுசராசா, மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-எ-20-27-66-56-110)

## திரும்பிச்...

மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சட்டத்தரணிக்குரிய உடையுடன் செல்லாததால் திரும்பிச் சென்றார். அதன்பின்னர் அவர் சட்டத்தரணிக்குரிய உடையுடன் மீளச் சென்று அகழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செம்மணி புதைகுழிய அகழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிட சட்டத்தரணி என்ற வகையில் அனுமதி பெற்றிருந்தார்.

நேற்று அவர் அகழ்வு நடவடிக்கைகள் பார்வையிடச் சென்றபோது, சாதாரண உடையுடன் சென்றிருந்த நிலையில், சட்டத்தரணிகள் அவர்களுக்கான உடையுடனே வரவேண்டும் என்பது அவருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டு திரும்பிச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சட்டத்தரணிக்குரிய உடையுடன் வந்து அகழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிட்டார். (அ-எ-26)

## மாதாவின்...

இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றுள்ளது. ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை நாரயம்பதி மாதா தேவாலயத்தில் உள்ள பல லட்சம் ரூபா பெறுமதியான மாதா சிலையே அடித்து உடைக்கப்பட்டுள்ளது. தேவாலயத்துக்கு அருகில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல்வாதியின் தலைமையில் 20 பேர் கொண்ட குழு ஒன்று கொண்டாட்டத்தில் ஈடுபட்டது. அதன்பின்னர் மதுபோதையில் தேவாலயத்துக்குச் சென்று அவர்கள் முரண்பட்டு, தகாத வார்த்தைகள் பேசி மாதா சொரூபத்தையும், அங்கிருந்த பொருள்களையும் உடைத்துச் சேதப்படுத்தினர் என்றும் கூறப்படுகின்றது. இந்த மாதா சிலை இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டது என்றும், பல லட்சம் ரூபா பெறுமதியானது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக தேவாலய நிர்வாகத்தினர் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து, விசாரணைகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அரசியல்வாதி உட்பட, 8 பேரைக் கைதுசெய்து பொலிஸார் தடுத்துவைத்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## சிரேஷ்ட....

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் ஏக காலத்தில் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தின் ஒட்டுண்ணியல் துறை, சத்திர சிகிச்சையியல் துறை மற்றும் சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறை ஆகிய துறைகளைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூன்று பேரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்றுச் சனிக்கிழமை ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று 26 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய, திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஒட்டுண்ணியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ. முருகானந்தன், சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி எஸ். குமரன் மற்றும் சத்திரசிகிச்சையியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கோபிசங்கர் ஆகியாரின் விண்ணப்ப மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் என்பன பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில் கலாநிதி ஏ. முருகானந்தன் ஒட்டுண்ணியலில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ். குமரன் குடும்ப மருத்துவத்தில் பேராசிரியராகவும், கலாநிதி எஸ். கோபிசங்கர் சத்திர சிகிச்சையியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (அ-எ-26)

## 100 ஐத்...

செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கையின் 21ஆம் நாள் அகழ்வு நடவடிக்கைகள் நேற்று நடைபெற்றன.

நேற்று புதிதாக 11 மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டன. அவற்றில் 9 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியில் இதுவரையில் 101 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், 90 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப்பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோரும் அகழ்வு நடவடிக்கைகளின் போது முன்னிலையாகி வருகின்றனர். (அ-எ-26)

வேலைவாய்ப்பு
யாழ் நகரில்
Event Management
நிறுவனத்தில் ஆண்
வேலையாட்கள் தேவை.
சம்பளம் - 45000/- to 50000/-
இடம் - கந்தர்மடம்
OT + EPF
T.P: 077 775 0318
(CS/3690) J-1

தேவை
சமையலாளர், உதவியாளர் தேவை.
வாடகைக்குண்டு
அறைகள் வாடகைக்குண்டு.
077 724 2427, 077 741 2713

ஆண்/பெண் விற்பனையாளர் தேவை
நல்லூரில் அமைந்துள்ள
காட்சியறைக்கு
விற்பனையாளர் தேவை.
நல்லூரில் அருகில் உள்ளோர்
விரும்பத்தக்கது.
T.P No: 077 100 7104

அண்ணா பொதிகள் சேவை
யாழ்ப்பாணம்
UK - 1,350/- 16+
France - 2,050/- 16+
Germany - 1,950/- 16+
Canada - 2,600/- 16+
தேவை
தொடர்பு:
075 330 5500 / 070 330 5500

வீடு வாடகைக்கு
80/4 Temple Road கொக்குவில்
கிழக்கில் அமைந்துள்ள வீடு
வாடகைக்குண்டு.
Whatsapp :- + 001 (647) 295-9848
(CS 3698) D*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

ஈவினை பிள்ளையார் கோயிலடி, புன்னாலைக்கட்டுவன் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இன்னும் 1 1/2 வருடங்களில் காய்க்கக்கூடிய தென்னையும் பல பயன்தரும் மரங்களும் இக்காணியில் உள்ளது.

தொடர்புகளுக்கு:- **070 335 3315**

## பதவி வெற்றிடம்

யாழில் உள்ள பிரபல வைத்தியசாலையானது பின்வரும் பதவிகளுக்காக தகுந்த ஊழியர்களை எதிர்பார்க்கின்றது.

- ✓ Human Resource Manager (HR) (மனித வள முகாமையாளர்)
- ✓ Media-Graphic Designer (மீடியா-கிராஃபிக் வடிவமைப்பாளர்)
- ✓ Operation Theatre Attendant
- ✓ Office Boy

குறிப்பு: யாழ் நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் உங்களது சுயவிபரக்கோவையினை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு 31.07.2025 இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

தொடர்புகளுக்கு:

**074 202 7318**

(CS/58959) J-1

## காணிகள் விற்பனைக்கு

கொழும்பு - 13 ஆட்டுப்பட்டி தெருவில், பெட்டா (Pettah), 11.63p மற்றும் 4P 1000 சதுர அடி கடைகளுடன் கூடிய காணிகள் விற்பனைக்கு.

தொடர்பு:- **077 076 8454**

## WELDING RODS விற்பனைக்கு

சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மிகவும் உயர்ந்த தரம். மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: **077 753 9522**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீட்டர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீட்டர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

**+61 421 290 240**

(CS/58874) J-1

## வேலையாட்கள் தேவை

DSR - Distributor Sales Representative

முன்னணி நிறுவனம் ஒன்றிற்கு AL படித்த ஆண்கள் DSR வேலைக்குத் தேவை

தொடர்பு: **076 328 0381**

## வேலையாட்கள் தேவை

**கணக்காளர்:**

களஞ்சிய இருப்புகள்/கணக்குகள் சரிபார்க்க AL படித்த கணனி அறிவுள்ள ஆண்கள்/பெண்கள் தேவை.

**குறிப்பு:**

1. 40 வயதிற்கு மேற்பட்ட அனுபவம் உள்ளவர்கள் தேவை
2. திருநெல்வேலி அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

(CS 58960) E

தொடர்புக்கு: **076 328 0381**

## கட்டிடம் வாடகைக்கு

A35 பிரதான வீதி, புன்னை நீராவி, விசுவமடு சந்தி, கிளிநொச்சியில் அமைந்துள்ள 52 x 33 நீள அகலம் கொண்ட கட்டிடம் வாடகைக்குண்டு. Bank, Insurance company க்கு கொடுக்கலாம்.

தொடர்புகளுக்கு: **077 215 8252, 077 744 6856**

Swiss Whatsapp Regular Call: **004 177 9075 523**

## காணி விற்பனைக்கு

வடமராட்சி மாலுசந்தி, நாவலடி பிரதான வீதியில் அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள 7 பரப்பு குளி 14.4/32 விஸ்தீரணமுள்ள வெட்டுக்கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

Whatsapp:- **0047 921 79729**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்காக O+ இரத்தவகை கொண்ட சிறுநீரகம் தேவைப்படுகின்றது. உதவ விரும்புவோர் கீழ் காணும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

(CS/29091) J-1

**077 476 7400**

## காணி விற்பனைக்கு

- ➤ நாவக்கிரியில் 17 பரப்பு தோட்டக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்கு.
- ➤ 2 பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணியும் விற்பனைக்கு.

பிரதான வீதிக்கு அருகில்

(CS/58943) J-1

தொடர்பு:- **077 082 1010**

## காணி விற்பனைக்கு

- ➤ **குளிப்பன் வீதி, வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டையில் 4 பரப்புக் காணி சுற்றுமதில் வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.**
- ➤ **நவாலி வீதி, சங்கரத்தைச்சந்தி, வட்டுக்கோட்டையில் 5.5 பரப்புக் காணி கடையுடன் விற்பனைக்கு உண்டு.**

(CS/58941) J-1

Tel:- **077 372 6685, 077 988 5452**

## ROYAL GRANITE CORNER

வேலை வாய்ப்பு

**வெற்றிடம்**

- வேலைத்தள உதவியாளர்கள் (அனுபவம் தேவையில்லை)
- அலுமினியத் தொழிலாளர்கள்
- வெல்டர்கள் (WELDER)
- தச்சு வேலை செய்பவர்

அனுபவம் : 1 வருடம்
வயது : 45 வயதுக்கு கீழ்

- ➡ தங்குமிட வசதிகள் வழங்கப்படும்
- ➡ சம்பளம் 60000 - 90000

இடம் : யாழ்ப்பாணம்

மேலும் தகவலுக்கு : **0773580547**

## வேலைவாய்ப்பு

**கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபலமான ஹோட்டலொன்றில் பின்வரும் வெற்றிடங்களுக்கான பணியாளர்கள் கோரப்படுகின்றனர்**

- ➤ வரவேற்பாளர் (Receptionist)
- ➤ விடுதி தூய்மைப் பணியாளர்கள் (Housekeeping Staff)
- ➤ பிரதான சமையல்காரர் மற்றும் உதவிச் சமையல்காரர் (Cook)
- ➤ உணவுப் பரிமாறுபவர்கள் (Waiters)
- ➤ சமயலறை உதவியாளர்கள்
- ➤ கணக்காளர் அல்லது நிர்வாக உதவியாளர்
- ➤ பொது பராமரிப்பு தொழிலாளர்கள் பாதுகாப்பு ஊழியர்கள்

முழுநேர மற்றும் பகுதிய நேர பணியிடங்கள் கிடைக்கின்றன.

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பணியிடம்:கிளிநொச்சி நகரத்துக்கு அருகிலுள்ள இடம்**

உங்கள் சுயவிபரத்துடன் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**077 399 9210**

## காணி விற்பனைக்கு

**நல்லூர் கோவிலில் இருந்து 500 M தூரத்தில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு**

(CS 58928) E

தொடர்பு: **077 306 8993**

## வீடுகள் வாடகைக்குண்டு

- ➤ நல்லூர் கோவிலில் இருந்து 400 M தூரத்தில் 4 அறை, வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு
- ➤ பலாலி வீதி திருநெல்வேலி Northway Family Mart க்கு அருகாமையில் 4 அறை, வாகனத் தரிப்பிடம், நவீன வசதியுடன் கூடிய வீடுகள் வாடகைக்கு உண்டு

தொடர்பு: **077 306 8993**
**076 373 4848**

## தேவை

**பாவித்த சுருக்கு கேற் தேவை**

தொடர்பு: **021 222 1052**
**077 167 1973**

## வேலையாள் தேவை

வெதுப்பகம் ஒன்றிற்கு பேஸ்டரி கேக் வேலை தெரிந்த வேலையாள் தேவை.

(CS/58936) J-1

தொடர்பு:- **074 001 5060**

## காணி விற்பனைக்கு

றக்கா ஒழுங்கை சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**076 342 4705**

## கட்டட வேலையாட்கள் தேவை

மேசன், தச்சுவேலை, வெல்டிங் வேலை, அலுமினியம் பிற்றிங்

தொடர்பு: **077 999 9020**

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper


யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற
யாக்கையா லாய பயன்கொள்க; — யாக்கை
மலைநாடு மஞ்சுபோல் தோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆடி 11 ஞாயிற்றுக்கிழமை (27.07.2025) சிகரம் :149

○ நிலாந்தன்

# மீண்டும் ஐ.நா.வுக்கு ஒரு கடிதம்?




கடந்த இருபதாம் திகதி, ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் "ரில்கோ" விருந்தினர் விடுதியில் ஒரு சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டது. சந்திப்புக்கான அழைப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் எடுத்திருந்தார். குறிப்பாக கருத்துருவாக்கிகளை அழைக்கும் பொழுது அவர் சர்வதேச விசாரணைப் பொறிமுறை தொடர்பாகக் கதைக்கப் போகின்றோம் வாருங்கள் என்று அழைத்திருந்தார். அதோடு கடந்த 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஐ.நாவு.க்கு அனுப்பப்பட்ட கூட்டுக்கடிதத்தின் தொடர்ச்சியாகவும் கதைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார்.

எண்பதுக்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள். தமிழ்த் தேசியப் பேரவையைச்சேர்ந்த கட்சித்தலைவர்கள், பிரமுகர்கள், குடிமக்கள் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், அணையாவிளக்குப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தவர்கள், மத குருக்கள்...என்றிவ்வாறாக பலதரப்பட்டவர்களும் அங்கே வந்திருந்தார்கள். முதலில் கஜேந்திரகுமார் பேசினார். தொடர்ந்து அங்கு வந்திருந்தவர்கள் பேசினார்கள்.

ஒரு கட்டத்தில் கஜேந்திரகுமார் அந்தக் கூட்டத்தின் நோக்கம் ஜெனிவாவுக்கு கடிதம் அனுப்புவது என்று சொன்னார். வரும் செப்ரெம்பர் மாதம் வர இருக்கும் கூட்டத்தொடரை முன்னிட்டு ஒரு கடிதத்தை அனுப்பவேண்டும். அந்தக் கடிதம் நான்கு ஆண்டுகளுக்கு முன் அனுப்பப்பட்ட கடிதத்தின் தொடர்ச்சியாகவும், அந்தக்கடிதத்தில் ஏற்கனவே கூறப்பட்டவற்றை வலியுறுத்தியும் எழுதப்பட வேண்டும் என்று கஜேந்திரகுமார் கூறினார். அவரைத் தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி குருபரனும் அதே கருத்தைக்கூறி அந்த நோக்கத்துக்காகத்தான் அந்தச் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டது என்று கூறினார். ஆனால் அழைக்கப்பட்ட ஒரு பகுதியினருக்கு அது பொதுவாக சர்வதேசப் பொறிமுறையைக் குறித்து ஆராய்வதற்கு என்றுதான் கூறப்பட்டது. ஜெனிவாவுக்கு கடிதம் எழுதுவதற்காக என்று தெளிவாகக் கூறப்படவில்லை.

அதனால் அந்தச் சந்திப்பில் சர்வதேசப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதற்கான பரந்துபட்ட வேலைத்திட்டம் தொடர்பாக ஆழமாக உரையாடப்படவில்லை. இந்தக்கட்டுரை ஆசிரியர் உட்பட சுரேஷ் பிரேமச்சந்திரன், சிறீகாந்தா, காணாமல் போகச் செய்யப்பட்டவர்களுக்காகப் போராடும் அமைப்பு ஒன்றின் முக்கியஸ்தர்..போன்றவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கும் அப்பால் சந்திப்பு பெருமளவுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்போகும் கடிதத்தை நோக்கியே குவி மையப்படுத்தப்பட்டது.

இந்த இடத்தில் அதற்கு முன் அதாவது நான்கு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கடிதத்தைப்பற்றிச் சுருக்கமாகக் கூறவேண்டும். அந்தக் கடிதத்தைத் தயாரிக்கும் வேலையை முதலில் தொடங்கியது மன்னாரைச் சேர்ந்த சிவகரன். அதன்பின் அவர் இக்கட்டுரை ஆசிரியர் உட்பட வேறு சிலரையும் அதற்குள் ஈர்த்துக் கொண்டார். முதலாவது சந்திப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றது. இரண்டாவது சந்திப்பு வவுனியாவில். மூன்றாவது சந்திப்பு கிளிநொச்சியில். இந்த மூன்றாவது சந்திப்பின் விளைவாக ஒரு கூட்டுக்கடிதம் தயாரிக்கப்பட்டது. அந்தக்கூட்டுக் கடிதத்தில் பிரதான அம்சங்கள் இரண்டு. ஒன்று, பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவைக்கு வெளியே கொண்டு போக வேண்டும் என்பது. அதாவது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களை பொறுப்புக்கூற வைப்பதற்கான அந்தப் பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்ற மட்டுப்படுத்தப்பட்ட ஆணையைக் கொண்ட ஒரு கட்டமைப்புக்குள் வைத்துக் கொண்டிருக்காமல் ஐ.நா. பொதுச் செயலர் பொறுப்புக்கூறலை மனித உரிமைகள் பேரவையிடமிருந்து தன்னிடம் எடுத்துக்கொண்டு, அதனை சர்வதேச நீதிமன்றங்களுக்கு பரிந்துரைக்க வேண்டும் என்பது முதலாவது கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்களை விசாரிப்பதற்காக ஒரு பொறிமுறையை உருவாக்குமிடத்து அதற்கு கால வரையறை இருக்க வேண்டும் என்பது. அதன்படி கஜேந்திரகுமார் 6 மாத காலம் கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். ஆனால் ஏனைய கட்சிகள் குறைந்தது ஒரு வருடமாவது வழங்கவேண்டும் என்று கேட்டன. முடிவில் இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து கூட்டுக்கடிதம் எழுதப்பட்டது. 12 ஆண்டுகளில் தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து அவ்வாறு உலக நிறுவனம் ஒன்றுக்கு ஒற்றுமையாக ஒரு கூட்டுக்கடிதம் எழுதியமை என்பது அதுதான் முதல் தடவை.

ஆனால் அந்தக் கடிதத்திற்கு ஐ.நா. பெருமளவுக்கு சாதகமாக பதில் வினையாற்றவில்லை. பொறுப்புக்கூறலை அவர்கள் தொடர்ந்தும் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்கியதோடு, சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான கட்டமைப்பும் மனித உரிமைகள் பேரவையின் ஆணைக்கு உட்பட்டதாக, அணையாளருடைய அலுவலகத்துக்குள் இயங்கும் ஓர் அலுவலகமாக உருவாக்கப்பட்டது. அதற்குரிய கால எல்லையும் நிர்ணயிக்கப்படவில்லை. இன்றுவரை அது செயற்படுகிறது.

அதாவது அந்தக் கடிதத்தில் முன் வைக்கப்பட்ட இரண்டு கோரிக்கைகளையும் ஐ.நா.வானது தமிழ் மக்கள் திருப்திப்படத்தக்க விதத்தில் நிறைவேற்றவில்லை. இந்நிலையில் இந்த செப்ரெம்பர் மாதம் வரவிருக்கும் ஐ.நா. கூட்டத் தொடருக்கு முன்னதாக தமிழ்க் கட்சிகள் மீண்டும் ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்புவதே ரில்கோ சந்திப்பின் நோக்கம் என்று கூறப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து போயிருக்கும் ஒரு பின்னணியில், அவர் கொழும்பில் வைத்துத் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளோடு உடன்படாதவைகளாகக் காணப்படும் ஒரு பின்னணியில், கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகம் தெரிவிக்கும் கருத்துக்கள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டத் தவறியிருக்கும் ஒரு பின்னணியில், இலங்கை அரசாங்கமானது சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம் ஒன்றை உருவாக்கவிருப்பதாக கஜேந்திரகுமார் அந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

அந்தக் கட்டமைப்பானது நாட்டின் உள்நாட்டுப் பொறிமுறையின் நம்பகத்தன்மையைப் பலப்படுத்தும் நோக்கத்தை கொண்டது. இது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருடைய எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யும் உள்நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் சட்டமா அதிபர் திணைக்களமானது அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருப்பதனால் அதன் சுயாதீனப் பண்பு குறித்து கேள்விகள் உள்ளன. எனவே உத்தேச சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகமானது சுயாதீனமானது என்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் முயற்சிக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், அதுபோன்ற உள்நாட்டுப் பொறிமுறைகளை பலப்படுத்தும் கட்டமைப்புகளை ஏற்றுக்கொள்ளாமல் சர்வதேச விசாரணையை வலியுறுத்தவேண்டும் என்றும் கஜேந்திரகுமார் கேட்டுக்கொண்டார்.

சந்திப்புக்குத் தமிழரசுக் கட்சி அழைக்கப்பட்டிருந்த போதிலும் அது வந்திருக்கவில்லை. அண்மையில் அந்தக்கட்சியின் பதில் தலைவர் சிவஞானம், ஐ.நா.வுக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில் அங்கு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. எனினும் சில நாட்களின் பின் சிவஞானம் நடத்திய ஊடகச் சந்திப்பில், தமது கட்சி அனுப்பிய கடிதம் உள்நாட்டுப் பொறிமுறையைக் கேட்கவில்லை என்று தெரிவித்திருந்தார்.

ஐ.நா.வுக்கு கடிதம் எழுதவேண்டும். அதில் சந்தேகம் இல்லை. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளை பேசுவதற்கு திறக்கப்பட்டிருக்கும் ஒரே சர்வதேச அரங்கம் அதுதான். அது பலவீனமானது. காஸாவில் மீண்டும் ஒரு முள்ளிவாய்க்காலைத் தடுக்க முடியாத ஐ.நா. தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நீதியைப் பெற்றுத்தரும் என்ற கேள்விக்கு இங்கு விடை முக்கியம். எனினும், தமிழ் மக்கள் ஐ.நா.வுடன்தான் "என்கேஜ்" பண்ணவேண்டும். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கு பிரச்சினை என்னவென்றால், ஐ.நா. பொறுப்புக்கூறலை சர்வதேச நீதிமன்றங்களிடம் பாரப்படுத்த வேண்டும் என்று ஒரு கடிதத்தைக் கூட்டாக எழுதுவதால் மட்டும் அது நடக்கப் போவதில்லை என்பதைத்தான் கடந்த நான்கு ஆண்டுகளும் நிரூபித்திருக்கின்றன.

ரில்கோ சந்திப்பில், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் போராடும் அம்மா ஒருவர் தெரிவித்ததுபோல தமிழ் மக்கள் ஐ.நா.வில் முடிவுகளை எடுக்கும் நாடுகளை நோக்கி லொபி செய்ய வேண்டும். ஈழத்தமிழர்கள் நீதிக்கான தமது போராட்டத்தில் சர்வதேச அரங்கில் தமக்கு ஆதரவான சக்திகளைத் திரட்

08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
27 ஜூலை 2025



# மாலினி பொன்சேகா

## இலங்கை சினிமாவின் ராணி (1947 - 2025)

○ ஆதிரன்

1

எண்பதுகளின் நடுப்பகுதியில் 'லக்ஸ் சோப்' விளம்பர லேபிள் ஒன்றில் தான் முதலில் அந்த முகத்தைப் பார்த்தேன். அந்தக் காலகட்டத்தில் அந்தவகை விளம்பர லேபிள் மிகப் பிரபல்யமானதொன்றாக இருந்தது. உள்ளூர்ப் பலசரக்குக் கடைகளில் அந்த விளம்பர லேபிள்கள் வரிசையாகத் தொங்கவிடப்பட்டிருக்கும் அல்லது ஒட்டப்பட்டிருக்கும். வெள்ளை வெளேர் பின்னணியின் நடுவே இடம்பெற்றிருக்கும் நீள்வட்டம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தேவதையின் முகந்துலங்குவதை ஒருமுறை பார்த்தேன். அந்தந்த நீள்வட்டங்களின் கீழே முகத்துக்குரிய தேவதைகளின் கையெழுத்தோடு லக்ஸ்சோப்பும் துலங்குவதுதான் அந்த விளம்பர லேபிள்களின் உள்ளடக்கம். அப்போது நான் பார்த்த மூன்று விளம்பர லேபிள்களில் இரண்டு முகங்களை உடனடியாக அடையாளங்காண முடிந்தது. ஏனெனில் ஒரு கையெழுத்துத் தமிழில் "ஸ் ரீதேவி" (நடிகை ஸ்ரீதேவி தமிழில் ஸ் ரீதேவி என்றுதான் கையெழுத்திடுவாராம்) என்றும் மற்றையது ஆங்கிலத்தில் Rekka (இந்தி நடிகை ரேகா) என்றும் கிறுக்கப்பட்டிருந்தது. மூன்றாவது கையெழுத்து சிங்களத்தில் இருந்ததால் அதற்குரிய முகத்தை அப்போது என்னால் அடையாளங் காண முடியவில்லை. எனினும் அந்த முகம் மற்ற இருவரின் முகங்களை விடவும் சற்று அழகாகவும் எடுப்பாகவுமிருப்பதாகத் தோன்றியது. பின்பொரு தடவை தற்செயலாகத் தொலைக்காட்சியில் ஒலியும் ஒளியும் பார்த்தபோது "இலங்கையின் இளங்குயில் என்னோடு இசைபாடுதோ?" என்ற பைலட் பிரேம்நாத் திரைப்படப்பாடல் காட்சியில் நடிகர் திலகம் சிவாஜிகணேசனோடு ஜோடியாக நடித்த மாலினி பொன்சேகாதான் அந்த லக்ஸ் விளம்பர லேபிளில் நான் அடையாளங்காணத் தவறிய முகத்திற்குரியவர் என்பது புரிந்தது. இலங்கை சினிமாவின் ராணி (Queen of Srilankan cinema) என்றழைக்கப்படும் நடிகை மாலினி பொன்சேகா 1978 காலப்பகுதியில் இலங்கை இந்தியக் கூட்டுத்தயாரிப்பில் உருவாகி வெளிவந்த "பைலட் பிரேம்நாத்" திரைப்படத்தில் சிவாஜி கணேசனுக்கு ஜோடியாக நடித்த பின்புதான் இலங்கையைக் கடந்தும் பிரபலமானார்.

1947 ஏப்ரல் 30ஆம் திகதி களனியில் பிறந்த வன்னி ஆராச்சிகே மாலினி செனஹெலதா பொன்சேகா எனும் மாலினி பொன்சேகா ஏறத்தாழ 70 வருடங்கள் இலங்கை சினிமாவின் ராணியாகத் திகழ்ந்து தனது எழுபத்தாறாவது வயதில் 2025 மே 24 கொழும்பில் காலமானார். 1963 காலப்பகுதியில் சிங்கள மேடை நாடக நடிகையாக அறிமுகமாகித் தொடர்ந்து ஐந்து வருடங்களாக நடித்துவந்தார். 1968 காலப்பகுதியில் புஞ்சிபபா (சின்னக்குழந்தை) என்ற திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்துச் சிங்களத் திரைப்படத்துறைக்குள் நுழைந்தார். அன்றிலிருந்து அவர் 140 திரைப்படங்களுக்கு மேல் நடித்து முடித்திருக்கிறார்.

1997 காலப்பகுதியில் எனக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுழைவுக்கான அனுமதி கிடைத்திருந்தநிலையில் அதற்கான முன்னாயத்த ஆங்கில விரிவுரை வகுப்புகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற்றுவந்தன. அது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த காலம். யாழ்ப்பாணம் முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்தது. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைச் சுற்றி வளைத்து இராணுவம் முகாமிட்டிருந்தது. அந்த விரிவுரை வகுப்புக்கு உள்நுழையும்போது வாசலிலிருக்கும் படையினரிடம் அடையாள அட்டையை ஒப்படைத்து விட்டுச்சென்று திரும்பி வரும்போது பெற்றுக்கொள்ளவேண்டியிருக்கும். அந்த விரிவுரை வகுப்புக்குச் செல்வது என்பது மிகுந்த மன அழுத்தத்தையும் சலிப்பையும் ஏற்படுத்துமொன்றாக இருந்தாலும் அதிலொரு நயமான சங்கதியுமிருந்தது.

அங்கே விரிவுரையாற்ற வந்தவர்களில் இரவீந்திரன் என்றொரு விரிவுரையாளர் குறிப்பிடத்தக்கவர். ஆங்கில



மொழியை வெகு எளிமையாகக் கற்பிக்கக்கூடியவர். அவர் தெரிந்தோ தெரியாமலோ ஒரு நல்ல வேலை செய்தார். தனக்கான விரிவுரை வகுப்பில் ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சிசெய்த காலப்பகுதியில் கொழும்பு நகரின் கவர்னராகப் பதவிவகித்த லியோனட் வூல்ஃப் (Leonard Woolf) எழுதிய Village in the Jungle என்ற புதினத்தை வாசித்து அதை மொழிபெயர்த்துக் கற்பிக்கலானார். அந்தப் புதினத்தில இடம்பெறும் உரையாடல்கள் கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டுமானதாக இருந்தது. அதனால் அவரது விரிவுரை வகுப்பானது எங்களால் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்படுமொன்றாக இருந்தது. அவர் அந்தப் புதினம் முழுவதையும் மொழிபெயர்த்து முடித்தபோது அதில் இடம்பெற்றிருந்த சிலிண்டு, கரலினா, முதலித்தன, புஞ்சிமெனிகா, பாபுன், ஃபெர்னாண்டோ என அனைத்துக் கதாபாத்திரங்களும் என் மனதில் பதிந்துவிட்டனர்.

நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி ஓராண்டு கடந்திருந்தநிலையில் அதாவது 2003 தொடக்கப்பகுதியில் யாழ்.திரைப்பட வட்டத்தின் திரையிடல் நிகழ்வொன்றிற்குத் தற்செயலாகச் சமுகமளித்திருந்தேன். அன்றையதினம் சிங்களத் திரைத்துறையின் சத்யஜித்ரே என வருணிக்கப்படும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் இயக்கத்தில் 1980 காலப்பகுதியில் வெளிவந்திருந்த "பத்தேகம" எனும் திரைப்படத்தைக் காட்டினார்கள். அதைப் பார்த்ததும் நான் மெய்சிலிர்த்துப்போனேன். Village in the Jungle மூலம் எனக்கு அறிமுகமான ஒவ்வொரு கதாபாத்திரமும் உயிர்த்தெழுந்து வந்திருப்பதாக உணர்ந்தேன். திரையிடலின் முடிவில் உரையாற்றிய ஈழத்தின் முக்கியமான திரைப்பட விமர்சகரும் எழுத்தாளருமான யேசுராசா "இது லியோனட் வூல்ஃப் எழுதிய Village in the Jungle என்ற நாவலை அடிப்படையாக வைத்து சிங்கள் சினிமாவின் தந்தையெனக் கருதப்படும் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் இயக்கி 1980 காலப்பகுதியில் வெளிவந்த படம். இதில் லியோனட் வூல்ஃப்பாக பாத்திரமேற்று நடித்திருப்பவர் அறிவியல் புனைகதை எழுத்தாளர் ஆர்தர் ஸி கிளார்க், சிலிண்டுவாக தென்னாசியாவின் சிறந்த நடிகர் விருது பெற்ற ஜோ அபேவிக்கிரமவும், அவரது மூத்தமகள் புஞ்சிமெனிகாவாக மாலினி பொன்சேகாவும், பாபுன்னாக விஜேகுமாரதுங்கவும் (முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர்), சிலிண்டுவின் மனைவி கரலினாவாக ட்ரெலிசிய குணவர்த்தனவும், ஃபெர்னாண்டோவாக சிங்கள சினிமாவின் தலைசிறந்த குணச்சித்திர நடிகர் டோனி ரணசிங்கவும், முதலித்தனவாக டேவிற் தர்மகீர்த்தியும் நடித்துள்ளனர்" என விலாவாரியாக குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் திரைப்படத்தில் சிலிண்டுவாகவரும் ஜோ அபேவிக்கிரம ஒரு முரட்டுத்தனமான குடும்பத்தலைவனாக வெளுத்து வாங்கியிருப்பார். மூத்தமகள் புஞ்சிமெனிக்கா பாபுன்னுடன் காதல் வசப்பட்டு அவரை மணந்துகொள்வாள். அதன்பின்னர் சிலிண்டு புஞ்சிமெனிக்காவை வெறுத்தொதுக்கத் தொடங்குவார். எப்போதும் ஒரு கட்டுத்துவக்கோடு அலையும் சிலிண்டுவாக ஜோ அபேவிக்கிரம அசாத்திய நடிப்பினை வெளிப்படுத்தியிருப்பார். அதற்கு ஈடுகொடுத்து புஞ்சிமெனிக்காவாக மாலினி பொன்சேகாவும் சோடைபோகாமல் மேவி நடித்திருப்பார். லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் இயக்கத்தில் வெளிவந்த "கம்பெரலிய" (1963) "அக்கார பஹே" (1970) "நிதானய" (1972) "வீர புரான் அப்பு" (1978) "பத்தேகம" (1980) "அம்ம வருணே" (2006) "வேக்கந்த வளவ்வ" (2002) ஆகிய ஆறு திரைப்படங்களில் மாலினி பொன்சேகா நடித்திருந்தார். மாலினி பொன்சேகாவை சிங்கள சினிமாவின் ராணியாக அங்கீகரித்ததில் முதன்மையான பங்கு லெஸ்டர் ஜேம்ஸ் பீரிசுக்குரியது.

(அடுத்தவாரம் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இன அழிப்பு:

## சர்வதேச நீதி விசாரணையும் பொருத்தமான பொறிமுறையும் !

அ.நிக்ஸன்

1949 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியை ஆரம்பித்த தந்தை செல்வா 1956 ஆம் ஆண்டு திருகோணமலையில் இடம்பெற்ற கட்சியின் மாநாட்டில் தமிழின அழிப்பை இலங்கை அரசாங்கம் கட்டமைத்துள்ளதாகக் கூறியிருந்தார்.

தமிழரசுக் கட்சி ஆரம்பித்த ஆண்டில் அம்பாறை கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தில் சிங்கள மக்களுக்கு அதிக அளவு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் எழுந்த இன முறுகலின் பிரகாரம், கட்டமைக்கப்பட்ட தமிழ் இன அழிப்பு நடைபெறுவதாக தந்தை செல்வா வியாக்கியானம் செய்திருக்கலாம். இங்கே கேள்வி என்னவென்றால், தந்தை செல்வா வழியில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் கூறியிருப்பது எந்த அடிப்படையில்?

இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணைக்கான கூட்டுரிமைச் செயற்பாட்டில் இணைவதா அல்லது கட்சி அரசியல் செயற்பாடுகளுடன் தேர்தல் அரசியலில் மாத்திரம் கவனம் செலுத்துதல் என்ற பின்புலத்திலா? எந்த நோக்கில் அந்த அழைப்பை அர்த்தப்படுத்தமுடியும்?

இன அழிப்புக்கான சர்வதேச நீதி விசாரணை என்பது மாத்திரமே ஈழத்தமிழர் தரப்பின் ஒருமித்த கோரிக்கையாக இருக்கவேண்டும். போர்க்குற்ற விசாரணை, மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை என்ற கோரிக்கைகள் தமிழர் தரப்பில் அவசியமில்லை. ஏனெனில், 1950 களில் இன அழிப்பு ஆரம்பிக்கிறது. ஆயுதப்போராட்டம் என்பது இடையில் ஒரு முப்பது வருடங்கள் மாத்திரமே. அந்த முப்பது வருடங்களிலும் வடக்கு - கிழக்கில் இராணுவம் நடத்திய கொலைகள் சித்திரவதைகள் மற்றும் காணி அபகரிப்புகள், புத்தர் சிலை அமைத்தல் எல்லாமே தமிழ் இன அழிப்புத்தான்.

2009க்குப் பின்னர் போரில் வீடுகளை இழந்த மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்ட புதிய வீடுகள் அமைந்துள்ள வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள நினைவுக் கற்கள் கூட பௌத்த மரபுரிமை அடையாளங்களுடன் அமைந்துள்ளன. ஆகவே, தமிழர் மரபுரிமைகள் மறைக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு பௌத்த மரபுரிமை அடையாளங்கள் தமிழர் பிரதேசங்களில் நிலை நாட்டப்படுகின்றமையும் இன அழிப்புத்தான். 2016ஆம் ஆண்டில் இருந்து தமிழ் வரலாற்றுப்பாட நூல்களில் பௌத்த சமய வரலாறுகளும் சிங்களச் சொற்களும் புகுத்தப்பட்டுள்ளன. 2009 க்குப் பின்னர் மகாவம்சம் ஆறு பிரிவுகளாக எழுதப்பட்டு தமிழ் மக்களின் மரபுரிமைகள் அடையாளங்கள் அனைத்தும் பௌத்த கலை கலாசாரமாக சித்தரிக்கப்பட் டுள்ளன. யாழ். பொதுநூலகம் 1981 இல் தமிழர்களினால் எரிக்கப்பட்டு சிங்கள மக்கள்மீது பழிசுமத்தப்பட்டுள்ளதாகவும் வரலாறு திரிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, இவை எல்லாமே இன அழிப்புத்தான். இந்த ஆதாரங்களோடு ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இன அழிப்புக் கோரிக்கை மாத்திரமே தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட வேண்டும். ஐ.நா. யுனெஸ்கோ விதிகளின் பிரகாரம் பாடநூல்களை மொழிபெயர்க்க முடியாது. அதுவும் ஓர் இனத்தின் வரலாற்றை மொழிபெயர்க்க முடியாது.

ஆனால், இந்த விடயங்கள் எதுவும் தமிழ்த் தேசியக் கட்சிகளினால் இதுவரை சுட்டிக்காட்டப்படவில்லை. இந்தப் பின்னணியில்தான் தமிழ் இன அழிப்புக்கான சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறை (International Impartial and Independent Mechaninsm IIIM) மிகப் பொருத்தமானது என அமெரிக்கச் சட்டவல்லுநரான பேராசிரியர் பிரான்ஸிஸ் பொய்ல் (Francis Boyle) 2021 ஆம் ஆண்டு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கியிருந்த நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

சிரிய நாட்டு விவகாரத்தில் 2016 ஆம் ஆண்டு டிசம்பரில் தோற்றுவிக்கப்பட்ட IIIM என்ற சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறைக்கு ஒப்பான பொறிமுறையே இலங்கை விடயத்திலும் பொருத்தமானது எனவும் பிரான்ஸிஸ் பொயில் சுட்டிக்காட்டியிருந்தார். பிரான்ஸிஸ் பொய்ல் கூறியதன் பிரகாரமே இந்தப் பொறிமுறை பற்றி 2021ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் நிபந்தனை விதித்திருந்தன. ஆனால் ஜெனிவாவுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையில் நான்காவது கோரிக்கையாகவே IIIM குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்துடன் ஒரு வருட காலத்துக்குள் இந்த IIIM என்ற இப் பொறிமுறைச் சாட்சியங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்ற மட்டுப்படுத்தல் ஒன்றை கஜேந்திரகுமார் அப்போது முன்வைத்திருந்தார். ஆனால் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்படவில்லை. இதன் காரணமாக சாட்சியங்களை சேகரிக்கும் ஒஸ்லாப் என அழைக்கப்படும் (Human (Rights OHCHR Sri Lanka Accountability Project OSLAP) அலுவலப் பொறிமுறை ஒன்றையே ஜெனிவா மனித உரிமைகள்பேரவை பரிந்துரைத்தது. தற்போது நடைமுறையில் உள்ளதும் இந்தப் பொறிமுறைதான். இது இன அழிப்பு விசாரணைக்குரியது அல்ல.

**"போர்க்குற்ற விசாரணை", "மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை" என்பது இன அழிப்புக்கான நீதியை நீர்த்துப் போகச் செய்யும் மேற்குலக உத்தியே**

ஆகவே இப்போது கூட IIIM எனப்படும் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையை மீண்டும் ஒருமித்த குரலில் வலியுறுத்தமுடியும்.

ஜெனிவாவின் பல பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் புறக்கணித்துள்ள காரணத்தால் இந்தப் பொறிமுறையைத் தமிழ்த்தரப்பு வலியுறுத்துவதோடு முதற்தர கோரிக்கையாகவும் இன அழிப்பு என்பதை மாத்திரம் வலியுறுத்தியும் அறிக்கையை மீண்டும் தயாரிக்க வேண்டும். வெறுமனே சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் பாரப்படுத்துங்கள் என்ற கோரிக்கை ஏற்புடையதல்ல. ஏனெனில், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளினால் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கோரப்படுகின்ற இரண்டு வகைக் குற்றங்களான போர்க்குற்றம் (War Crimes) மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் (Crimes Against Humanity) ஆகியவை மட்டுமே விசாரணை செய்யும் நிலை ஏற்படும்.

இந்த இரண்டு குற்றங்களுக்கும் மேலான பெருங்குற்றமான இன அழிப்பை (Genocide) சர்வதேச நீதிமன்றத்தில் முழுமையாக விசாரித்த பின்னரே, போர்க்குற்றம், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்ற இரண்டு குற்றங்களுக்கும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தமிழர் தரப்பு கூட்டாகவும் அழுத்தமாகவும் முன்வைக்கவேண்டும்.

குறிப்பாக, இன அழிப்பு முதலில் விசாரிக்கப்பட்டு அதற்கு உட்பட்டவையாகவோ அல்லது அதற்குக் குறைவான அடுத்தகட்ட நிலையில்தான் மற்ற இரு வகை குற்றங்களும் கவனத்தில் எடுக்கப்படவேண்டும். ஏனெனில், இன அழிப்பு என்ற பார்வையில் அணுகப்படாவிடில் அதற்குரிய குற்றங்கள் எல்லாம் மற்றைய இரண்டுக்குள் மாத்திரம் உள்வாங்கப்பட்டு இன அழிப்புக்கு ஏற்ற நீதி நடைமுறை மறுக்கப்படும் ஆபத்து உண்டு. ஐக்கிய நாடுகள் சபையின் இதுவரை கால அறிக்கையிடல்கள், குறிப்பாக 2015 இல் முன்வைக்கப்பட்ட OISL எனப்படும் (Report of the OHCHR Investigation on Sri Lanka OISL) விசாரணை அறிக்கை உள்ளடங்கலாக போர்க்குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவை மட்டும் நடந்திருப்பதாகவே உறுதிப்படுத்தியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறிக்கையிடல்கள் 'இன அழிப்பு' என்ற பெருங் குற்றத்தைத் தவிர்த்ததற்குக் காரணம் அதற்குரிய சுட்டிக் காட்டலுடனான குறிப்பு விதிமுறைகளுடன் (Terms of Reference ToR) தீர்மானங்கள் இயற்றப்படாமையாகும். இதற்கு புவிசார் சர்வதேச அரசியல் பிரதான காரணம்.

அதேநேரம், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) 2002 ஆம் ஆண்டில் தான் ஆரம்பிக்கப்பட்டது.

அதன் மூலச் சட்டம் (Rome Statute) 2002 ஜூலை மாதத்துக்குப் பின்னரான குற்றங்களை மட்டும் கையாளும் அதிகாரத்தைக் குறித்த நீதிமன்றத்துக்கு வழங்கியுள்ளது. ஈழத்தமிழர் மீதான இன அழிப்புக்கான பெரும் உத்தி (Grand Strategy) 1950 களின் இறுதியிலிருந்து ஆரம்பிக்கிறது. அதேவேளை, 1950இல் இன அழிப்புக்கு எதிரான சாசனத்தை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டிருப்பதால் இன அழிப்புக்கான கால வரையறை சிறப்புத் தீர்ப்பாயம் உருவாகும் பட்சத்தில் அகலமாக்கப்படும் வாய்ப்பு உள்ளது. மேற்படி உதாரணங்களுடன் 2009 க்குப் பின்னரும் இன அழிப்புத் தொடர்கிறது என்பதையும் தமிழ்த் தரப்பு சுட்டிக்காட்டவேண்டும்.

இலங்கை தொடர்பாக இதுவரைகால ஐ.நா. அறிக்கையிடல்களும் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் (LLRC) கால எல்லையான 2002-2009 பகுதியையே தமது பிரதான கால எல்லையாகக் கொண்டிருந்தன. அத்துடன், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திடம் கையளிப்பதை விடவும் ஒரு சிறப்புக் குற்றவியல் தீர்ப்பாயம் (International Criminal Tribunal ICT) அமைவதே மேலானது.

காலவரையறை, குற்ற வரையறை, கனதி போன்ற இன்ன பிற காரணிகளால் அது மிகவும் உகந்ததாக அமையும். யூகோஸ்லாவியா (1993) , ருவாண்டா (2000) ஆகியவற்றுக்கு பின், அதுவும் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உருவான 2002ஆம் ஆண்டுக்குப் பின்னர் இவ்வாறான சிறப்புக் குற்றவியல் தீர்ப்பாயங்கள் அமைப்பது தொடர்பான தயக்க நிலை ஐ.நா. வட்டாரங்களில் காணப்பட்டது.

(07ஆம் பக்கம் பார்க்க)

# ஊர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

'ஊர்ப்புதினம் 36 ' ஐ வாசிச்சிட்டு மருதங்கேணி டீ.எஸ். ஒப்பிஸில வேலை செய்யிற மணிக்குமார் எண்ட பெடியன் எனக்குக் கோலடிச்சு, "சேர் நீங்கள் ஊர்ப்புதினத்தில பவா அக்கா சரோஜாதேவி மாதிரியிருப்பா எண்டு எழுதியிருக்கிறியள். அந்தச் சரோஜாதேவி இண்டைக்குச் செத்திட்டா தெரியுமா?" எண்டுகேட்டான். சரோஜாதேவி செத்தது அவன் சொல்லித்தான் எனக்குத் தெரியும். "ஆனால் பவாக்கா இப்பவும் பிள்ளைகுட்டியளோட ஜேர்மனியில இருக்கிறா அப்பு!" எண்டு நான் அவனுக்குச் சொன்னன். 'அப்பிடியே? உண்மையில பவாக்கா சரோஜாதேவி மாதிரியிருப்பாவோ? அல்லது சும்மா முசுப்பாத்திக்கு எழுதினனீங்களோ?' எண்டு அவன் கேட்டான்.



"அப்பு! இதெல்லாம் முசுப்பாத்திக்கு எழுதிற சங்கதியில்லை. பவாக்காவுக்கு வடிவாயொரு மேக்அப் போட்டுப் பாத்தால் அச்சொட்டா சரோஜாதேவி மாதிரியிருப்பா. அவாவும் ராதாமாமாவும்சேர்ந்து நிண்டு எடுத்த போட்டோ ஒண்டு என்னிட்டக் கொஞ்சக் காலம் இருந்தது. உன்ர துரதிர்ஷ்டமா அது எங்கையோ தவறிப்போட்டு. தப்பித் தவறிக்கிடைச்சால் வற்சப் பண்ணிவிடுவன். அப்பபாத்திட்டுச்சொல்லு" எண்டு நான் அவனுக்குச் சொன்னன்.

## 38

மணிக்குமார் ஊர்ப்புதினத்தைத் தொடர்ந்து வாசிக்கிற ஒராள். பிறகு நேரில சந்திக்கேக்குள்ளையும் அல்லது கோல் எடுத்தும் அதைப் பற்றிக் கதைப்பான். அவனிட்டப் பல நல்ல குணவியல்புகளிருக்கிறதை நான் அவதானிச்சிருக்கிறன். அதிலை முதலாவது பொஸிற்றிவ் அப்ரோச் , அதாவது நேரான அணுகுமுறை. எதையும் பொஸிற்றிவ்வாத்தான் பாப்பான். கதைப்பான். இதையொரு முக்கியமான விசயமா நான் பாக்கிறன். அவனோட நெருங்கிப் பழகின ஆரைக்கேட்டாலும் அவனொரு நல்ல பொடியன் எண்டுதான் சொல்லுவினம். காரணம் ஆக்களுக்கேற்ற மாதிரிப் பழகுவான், நடந்துகொள்வான். அவன் யாழ். பல்கலைக் கழகம் நடத்தின ஊடகவளங்கள் கற்கைநெறியினை மேற்கொண்டு டிப்ளோமா எடுத்தவன். அந்தக்கற்கைநெறியினை மேற்கொண்டிருந்த 2010 பிற்பகுதியில்,தழிழகத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த குழுவினரில் மணிக்குமாரும் இடம் பெற்றிருந்தான். அந்தச் சுற்றுப்பயணத்தினால் எனக்கும் பெருநயம் விளைந்தது.

2010 தொடக்கத்தில் தமிழகத்திலிருந்து வெளிவரும் 'புது எழுத்து சிற்றிதழ்' ஆசிரியர் மனோன்மணி தொலைபேசி உரையாடல் ஒன்றில் எனது சிறுகதைகள் அடங்கிய தொகுப்பொன்றினை புது எழுத்து வெளியீடாகக் கொண்டு வரலாமென எனக்குச்சொல்லி 11 சிறுகதைகளை உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொண்டார். நானும் ஆர்வக்கோளாறினால் உடனடியாக அனுப்பிவைத்தேன். 2010 தைப்பொங்கலுக்கு வெளிவரும் என மனோன்மணி உத்தரவாதமளித்திருந்த சிறுகதைத்தொகுப்பு தீபாவளி கடந்தும் வெளிவரவில்லை. இதற்கிடையில் மனோன்மணியுடனான தொலைபேசித் தொடர்பும் முற்றாகத் துண்டிக்கப்பட்டு விட்டது. உண்மையில் எனக்கு ஒரு சிறுகதைத்தொகுப்பை வெளிக்கொண்டு வருவதில் ஆர்வமிருக்கவில்லை. மனோன்மணியாகவே கேட்டுக்கொண்டதால் சிறுகதைகளை அனுப்பிவைத்திருந்தேன். அதனால் 'போனால் போகட்டும் போடா!' எண்டிருந்து விட்டேன்.

இந்நிலையில் தற்செயலாக ஒரு நாள் மனோன்மணிக்கு அழைப்பெடுத்தபோது தொடர்பு கிடைத்தது. ஒவ்வொரு தடவையும் அழைப்பெடுக்கும்போது 'புத்தகமேன் வரவில்லையென்பதற்கு 'ஒவ்வொரு காரணம் சொல்லும் மனோன்மணி இம்முறை தொலைபேசி அழைப்பெடுத்தபோது எனது சிறுகதைத்தொகுப்பு வெளிவந்துவிட்டதாகவும் 2011 தைப்பொங்கலுக்கு வெளியீட்டு நிகழ்வினை நடத்தவுள்ளதாகவும் சொன்னார்.

(தொடரும்)

15

# கற்கண்டு ஓடை


(Cat Gun - Do or Die)



திருப்பங்கள் நிறைந்த சித்திரத் தொடர்கதை

கதை: இ.சு.முரளிதரன்

வரைகலை - மகேந்திரன் வினித்




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகேசன் கஜேந்திரன்


# வன் கூடுகள்

'சல..சல...சல..' சலங்கைகள் ஒலிக்க.. துள்ளித் துள்ளி ஓடும் பெண் போல கோடிக் கரையில் ஆறு ஓடிக் கொண்டிருந்து.
பௌர்ணமி ஆதலால் உயர்வதும்..பதிந்துகொள்வது மாக..நெளிந்தபடி.....!
வீட்டுக்காணி எல்லைக் கோடியில் மகாவலி ஆறுதான் ஓடிக்கொண்டிருந்தது. அப்படி.
பால் நிலவு. அதில் பட்டுப் பட்டுத் தெறித்து துள்ளிச்செல்லும் ஆற்றின் கன்னத்தில் கிள்ளி விளையாடும் குறும்பைச் செய்து கொண்டிருந்தது.
ஆற்றின் ஓரத்தில் வரிசையாக நின்ற கமுகு மரங்கள். மெலிந்து நெடுத்த இளவரசர்கள் அருகருகே நிற்பதாக 'மெனிக்கா' நினைத்துக்கொண்டார்.
கமுகு மரங்களின் கால்களில் இருந்து ஆரத் தழுவத் தொடங்கிய வெற்றிலைக் கொடிகள் இளவரசிகளாக கமுகு மன்னவனின் உடலில் படர்ந்துமார்பு தாண்டி முகத்தை முத்தமிட எத்தனிப்பதைப் போல கமுகின் வட்டு வரை படர்ந்து 'முத்தம் தரவா?' என்றன.
கமுகும் 'சம்மதம் 'என்று தலையாட்டுவதுபோல ஆடிக் கொண்டிருந்தது.
தொலைவில் ... பூரணையில்.பிரித் ஓதும் பிக்குகளின் குரல் கேட்டுக்கொண்டிருந்தது.
இவையெல்லாவற்றையும் அங்குலம் அங்குலமாக இரசித்தவாறு வளவின் பின்பாக உட்கார்ந்து கொண்டிருந்தார் மெனிக்கா என்கின்ற அந்த வயோதிப மாது.
அந்த வளவில் இருந்த பெரிய பங்களாவிலிருந்து கணவரின் குழறல் சப்தம் கேட்டதும்... சுயநினைவுக்கு வந்தவராக...
மறுநாள் தான் ஏற்பாடுசெய்திருந்த மதியவிருந்தைப் பற்றி ஏதும் கணவர் அறிந்துவிட்டாரோ ?
"கணவருக்கு அது 'சர்ப்பிறைஸ் லஞ்ச்'ஆக இருக்கவேண்டும் என்றல்லோ ஆசைப்பட்டேன்" என்று மனதுக்குள் நினைத்தபடியே வீட்டுக்குள் நுழைந்தார் மெனிக்கா நோனா.

*****

தனது கணவரின் 75ஆவது பிறந்தநாளை - பவள விழாவைக்- கொண்டாடுவதற்காக... அவருடன் முகாமில் கடமையாற்றிய இரு நண்பர்களையும் மதியபோசனத்துக்காக அழைத்திருந்தார் மெனிக்கா .
மெனிக்கா அம்மேயின் கணவர் இராணுவமுகாம் ஒன்றின் பொறுப்பதிகாரியாக கப்டன் தரத்தில் இருந்தவர்.
45,50 வயதுகளில் ஆஜானபாகுவாக இருந்த அவர் முழுவதுமாகக் கோலம் மாறியிருந்தார்.
தற்போது அவருக்கு இருகால்களும் தொடையுடன் அகற்றப்பட்டநிலையில் வீட்டுத் தரையில் அரைந்து அரைந்து திரியும் வாழ்க்கை.
கண்கள் இரண்டும் பார்வை இழந்தவராய் பாவியாய் ... மிகுதி நேரம் எப்போதும் சக்கரவண்டியில் தான் அவரது நடமாட்டம்.
பெரும்பாலும் அவரது பொழுதுபோக்கு வானொலி கேட்பது
வாகனச் சாரதி வீட்டுக்குவருகின்ற வேளைகளில். ரீவியில் செய்திகளைக் கேட்டுக் கொள்வார்.
'ரீ வி' யில் வருகின்ற செய்திகளைப் போடச் சொல்லிவிட்டு நேர்முக வர்ணனை போன்று சாரதியின் வாயால் கேட்டறிவார்.
இந்த வயதிலும்... அவரை நன்கு கவனித்துக்கொள்வது அன்பான அவரது வயோதிப மனைவிதான்.
வாழ்வே தண்டனையாக எப்போது சாவு வரும் என்கிற வழிபாட்டுக்காக மட்டுமே விகாரைகளில் தவம் கிடக்கும் அவலம், பல காலமாய் அவருக்கு.
அவரைச் சக்கரவண்டியில் ஒவ்வொரு பூரணைக்கும் அருகில் உள்ள விகாரைக்குக் கூட்டிச் செல்வதும்... அவரிலும் 5 வயது குறைவான வயோதிப மனைவி மெனிக்கா அம்மைதான்.
கணவர் தன் சாவை விரும்பும் வேண்டுகைக்காக விகாரைகளுக்கு அழைத்துச் செல்லும் முதலாவது மனைவியும் மெனிக்காவாகத்தான் இருப்பாரோ.
புத்தரும் கணவர்மீது கடுங்கோபம் .
ஒருபோதும் கண்ணைத் திறந்தே பார்ப்பதில்லை.
நித்திரையில் அரற்றுவதும் புலம்புவதும் ... சில வேளைகளில் "ஓ" என்று கத்தவும் செய்வார் அந்த ஓய்வுநிலை இராணுவ அதிகாரி.

*****



அந்த அதிகாரியின் ஆரம்ப வாழ்க்கை அழகானது.
புத்தரின் போதனைகளில் புளகாங்கிதமடையும் அமைதி, ஆனந்தம், அகிம்சை என்பன மல்லிகைப்பூ வாசனையாக மாணவப் பருவத்தில் அதிகமாக இருந்திருந்தது
இதனால் ஆகர்ஸிக்கப்பட்ட மெனிக்காவும் காதல் வசப்பட்டு கல்யாணம் செய்திருந்தார்.
விவசாயம் வர்த்தகம் என்று மெனிக்கா தம்பதிகள் ஆனந்தமாக வாழ்ந்த ஊர்தான் அது.
திருமணமாகி இரண்டு வருடங்களுள் இராணுவ ஆட்சேர்ப்பில் நியமனம் பெற்றிருந்தான் கணவன்.
எப்போது சீருடைக்குள் கணவன் நுழைந்தானோ அன்றிலிருந்து பற்றியது பீடை.
அவர்களது வசந்த கால நதி திசை மாறியது.
ஒவ்வொரு முறையும் கர்ப்பந்தரிக்கும் போதும் கணவர் படுகின்ற சந்தோஷம் பெரியதாக இருக்கும் மெனிக்காவுக்கு
ஆனால்..இரண்டு மூன்று மாதங்களில் கரு சிதைந்து போவதுதான் பரிதாபம்.
மெனிக்கா அடிக்கடி கேட்பார் .
"நாகதீபம் போய்வருவோமா அம்மன் தெய்யோவிடம் நேர்த்தி வைப்போமா?"
கணவரின் கை கால் நடுங்குவதையும் கண்களுள் மிரட்சி குடிகொள்வதையும் கண்டு ... புரியாதவராக வியப்பார் அந்த அப்பாவி மனைவி.
சாதாரண சிப்பாயாக இணைந்து நாற்பது நாற்பத்தைந்து வயதுகளில் இராணுவ அதிகாரியாக உயர்ந்தவராம் மனுசன்.
பதவிதான் உயர்ந்ததே தவிர.. இரக்கம், கனிவு, சாந்தம், பரிவு, நியாயம் என்பன தாழ்ந்து போயின.
கர்ண கொடூரமும்..சர்வாதிகாரச் சண்டித்தனமும் அவர் பாணியாயின.
இடையிடையே ஊருக்கு வரும்போதெல்லாம் அவரது அகத்தை முகம் காட்டுவதை மனைவி உணரத்தெரியாதவளாகவும் இருந்ததில்லை. தனது இராணுவமுகாமில் இருந்ததாகக்கூறி பனம் பழங்களை சாக்குகள் நிறையுக் கொண்டுவருவார்.
அவரது இராணுவமுகாம் காணி பெரிய பனங்கூடல் வெளியில் இருந்திருக்கவேண்டும்.
கணவர் விடுமுறையில் வந்த சில நாள்கள்கூட மனைவி மெனிக்கா மகிழ்ச்சியாக இருந்ததில்லை.
அப்படியொரு கொடூரமான முகமும் காட்டேரி மனமாக அவன் நடந்துகொள்வான். அப்போதும் மெனிக்கா புத்தரின் முன் மண்டியிட்டு அழுதிருப்பாள்.
எப்போதும் போன்று சோக வதனத்தில் மௌனப் புன்னகையுடன்தான் அமர்ந்திருப்பார் கௌதமர்.
இன்று ....அந்த முன்னாள் இராணுவமுகாம் அதிகாரிக்குத்தான் 75 வது பிறந்தநாள்.
ஏன் இவன் பிறந்தானோ? என அவனது உறவுகளும் ஊரவர்களும் வெறுக்கும் அந்த முதியவருக்கு மனைவி மட்டும் தான் எல்லாமே.
வாகனச்சாரதியும் அவனது மனைவியும் மட்டுமே அந்தப் பங்களாவுக்கு வந்துபோகும் இரண்டு சீவன்கள்.
உறவினரும் ஊரவரும் அயலவரும் எவருமே வயதான தம்பதிகளை எட்டிப் பார்ப்பதில்லை.
அந்த அளவிற்கு இராணுவ அதிகாரிக் கிழவன்மீது வெறுப்பு.

*****

சஞ்சீவி
சிறுகதை

மதிய விருந்துக்காக அவரின் நண்பர்கள் இருவரும் வந்து சேர்ந்து விட்டனர்.
மேசையில் விதம் விதமான உணவு வகையறாக்கள்.
" டார்லிங்...வாசனை தூக்குது என்னதான் அப்பிடிக் பண்ணியிருக்கிறீர்?" என ஒரு பக்கம் இழுத்திருந்த வாயால்
விக்கி விக்கிக் கேட்டார் இராணுவக் கிழவர்..
"நாட்டுச்சேவல் பிரட்டல், பேட்டுக்கோழிக் குழம்பு. அதுக்குள்ள கிடந்த முட்டையையும் அது முன்னமே போட்ட முட்டைகளையும் அவிச்சும், பொரிச்சும் வைச்சிருக்கிறன். விறாத்துக்குஞ்சு இரசம் விருப்பம் எண்டு அடிக்கடி சொல்லுறனியள், அதையும் செய்திருக்கிறன் டார்லிங்" என்றார் மெனிக்கா.
முன்னாள் இராணுவ அதிகாரிக் கணவருக்கு பார்வையில்லாக் கண்கள் பனித்தன.
அவரது இரண்டு பழைய நண்பர்களினதும் முகத்திலும் சோகம் படர்ந்தது..



சாப்பிட முதல் விருந்துக்கு வந்தவர்களிடம் மெனிக்கா கேட்டார்,
" இந்த விருந்திலை ஒரு விஷேசம் இருக்குத் தெரியுமோ உங்களுக்கு ?"
அனைவரும் முழுசிக் கொண்டனர்.
திரும்பவும் ஒருமுறை கேட்டார் மெனிக்கா.
"இந்த விருந்திலை ஒரு விஷேசம் இருக்குத் தெரியுமோ ?"
ஒரு விடயத்தை இருமுறை சொல்வதும் கேட்பதும் மெனிக்காவின் இயல்பு ஆகிவிட்டது சில வருடங்களாக.
"ஓகே..ஓகே..றெல் மீ டார்லிங்..யுவர் ஸ்பெஷல் ஒவ் லஞ்ச்..?"
வந்திருந்த இருவரும்கூட அந்த ஸ்பெஷலை அறிய ஆவலாயினர். கூடமாட ஒத்தாசை புரிய வந்திருந்த வாகனச்சாரதியும் அவர் மனைவியும்.. "அப்ப யம்மு" என்று சொல்லி அகன்று விடச் செல்லும்போது...
"மல்லி பொட்டகின்ட..ஓன் கரணுவா..பி.பி.சி நியூஸ் ரைம் ஆவ"
தொலைக்காட்சியில் பி.பி.சி. உலகச் செய்திகள் போய்க் கொண்டிருந்தன. கிழவரும் விருந்து அமளிக்குள்ளும் காதைத் தீட்டி உன்னிப்பாக செய்திகளைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தார். வந்திருந்த அவரது இராணுவ நண்பர்களும் ரீவி திரையைப் பார்த்தபடி இருந்தார்கள்.
மனைவி தொடர்ந்தார்.
"இந்த விருந்திலை ஒரு ஸ்பெஷல் மேற்றர் இருக்கெண்டு சொன்னனல்லோ. அந்த ஸ்பெஷலைச் சொல்லுறன் கேளுங்கோ.

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
27 ஜூலை 2025

# மனோ அண்ணை; சில நினைவுகள்!

O கோகுலராகவன்



சில மனிதர்களுடைய நினைவுகளை எளிதில் மறக்கமுடியாது.
மனோ அண்ணை என்கிற மனோ லைற் உரிமையாளருடன் கிட்டத்தட்ட பதினைந்து வருட நட்பு. அதில் மறக்கமுடியாத நினைவுகளைத் தந்து விட்டுப் போய்விட்டார்.
நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயக் கப்பல் திருவிழா அப்பாவின் உபயமாக எனக்கும் தொடரும் தெய்வப் பணி.
அங்கே ஒளியூட்ட மனோ அண்ணன் வருவார். திருவிழாவை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பில் நானும் ஒருவன்.
என்னவோ தெரியாது மனோ அண்ணையிடம் சில தேவைகளை நிறைவுசெய்ய நானே போகவேண்டி இருந்தது.
வடக்கு வீதிக்கு 'லைற் 'அதிமாகப் போடவேண்டிய தேவை இருந்தால் மனோ அண்ணையிடம் கவனமாகக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால் திருவிழா முடிந்தாலும் 'லைற்' போடுப்படாது.
மனோ அண்ணை கொஞ்சம் கறார் பேர்வழி. கொஞ்சம் அழுத்திக் கதைத்தால் ஆள் போய் 'லைற்' பெட்டிக்கு மேலே படுத்து விடும்.
இதனால் நானே கதைக்கப் போவேன்.
"அண்ணை வடக்கு வீதிக்கு இன்னும் ரண்டு 'லைற்' போட்டால் வடிவாக இருக்கும்"
"அதுக்கென்ன மாஸ்ரர் போடுவம்."
சுமுகமாக முடியும்.
'லைற்' போடத்தானே வந்தனீங்கள் போடுங்கோ என்று சொன்னால் கதை சரி.
என்னுடைய கவனமான உரையாடல் முறை மனோ அண்ணைக்குப் பிடித்திருக்க வேண்டும் .
அன்பால் என்னோடு இணைந்து கொண்டார்.
ஓர் இலக்கியக்காரனுக்கும் ஒரு 'லைற்' காரனுக்கும் கதைக்க என்ன இருக்கப்போகிறது?
ஆனால் நிறையக் கதைப்போம்.
சாதாரண ஆனால் சமூக ஊடாட்டம் கொண்ட மனிதர்களிடம் கதைக்கவும் அறியவும் நிறைய விடயங்கள் தேங்கிக் கிடக்கும்.
அதைப் பக்குவத்தோடு கதைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.
அவர் மனைவி லைலா அக்கா சொல்லுவார்
" மனோ அண்ணை சிரிச்சுக் கதைக்கிற ஒராள் நீங்கள் மட்டும்தான் மாஸ்ரர்."
இங்கு ஒன்றைக் கவனியுங்கள் ..லைலா அக்கா , மனோ அண்ணையைக் காதலித்து திருமணம் செய்தார்.
காதலிக்க முன் அவரை மனோ அண்ணை என்று அழைத்தவர் காதலித்த பின்னும், திருமணமான பின்னும் அவ்வாறே அழைத்துக்கொண்டார்.
'ஏன் அப்படி?' என்று கேட்டேன்.
"அவரும் விடச்சொல்லேல்லை நானும் விடேல்லை"
இருவரும் சிரிப்பினம்.
அதிலும் லைலாக்கா சிரிப்பை நிறுத்தவேமாட்டார்.
ஒரே ஒரு நாள் மட்டுமே நான் அந்த வீட்டில் சிரிப்பைக் காணமுடியவில்லை.
2015 அல்லது 2016 இல் சோமாஸ்கந்த ஆரம்பப் பாடசாலையில் முதன் முதலாக ஒரு பரிசளிப்பு விழாச் செய்தோம்.
அதில் மேடைக்கு அலங்கார வெளிச்சம் செய்தால் நன்றாக இருக்கும். மனோ அண்ணையிடம் போனேன். ஒத்துக் கொண்டார்.
"எவ்வளவு மனோ அண்ணை?"
"எவ்வளவு தருவியள்?"
எனக்குச் சொல்லக் கூச்சமாக இருந்தது.
ஒரு ஐயாயிரம் என்று நினைத்துக்கொண்டாலும். சில வேளை பேசிவிடுவாரோ என்ற பயத்தில்
"ஆறாயிரம்" என்றேன்.
சிரித்தார்.
"காசுக்காக வரல்லே உங்களுக்காகத்தான் வாறன்."
உண்மையில் அது இருபத்தைந்தாயிரம் ரூபா பெறுமதியான வேலை.
சிறப்பாகச் செய்துதந்தார்.
அவரது இறுதி அஞ்சலியில் இதைச் சொல்லி அழ வேண்டி இருந்தது.




என் வாழ்க்கையில் அப்பாவின் இறுதிநாளில் அழுதற்கு பிறகு நான் கண்ணீர் விட்டு அழுதது மனோ அண்ணையின் இறுதிஅஞ்சலியில்தான்.
யாழ்ப்பாணத்தின் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்கள் அனைவரும் மனோ அண்ணையிடம் பெரும் நட்புக்கொண்டவர்கள். அவரது நீண்டகாலத் தொழில் வாழ்க்கையில் நிறைய நாதஸ்வர தவில் கலைஞர்களோடு பழக அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது.
அவர்களை மதித்து நடந்துகொண்டவர்.
அவர்களும் இவரை அன்பாகக் கொண்டாடினார்கள்.
எனக்கும் தவில் கலைஞர் உதயசங்கர், பாலமுருகன், குமரன் ஆகியோருடைய நட்பு வலயத்தை உருவாக்கித் தந்தார்.
நாதஸ்வர வித்துவான் பாலமுருகனின் வளர்ச்சியில் மனோ அண்ணையின் பங்கு நிறைய உண்டு என்பதை பாலமுருகன் அஞ்சலி உரையில் மிக வேதனையோடு பகிர்ந்துகொண்டார்.
குமரனை சிறுவயதில் தூக்கி வளர்த்தவர்.
பஞ்சமூர்த்தியால் "மனோ" என வாஞ்சையாக அழைக்கப்பட்டவர். சாதரண மின் ஒளி அமைப்பாளர் ஒரு மகா கலைஞனாக பாலமுருகனை அவனுடைய சிறு வயதில் இனங்காண எவ்வளவு நுட்பம் தேவை.
அப்படியான பெருமனிதன் மனோ அண்ணை.
அவர் வட க்கு, கிழக்கு மாகாணத்தில் போகாத கோயில் இல்லை.
திருகோணமலை காளி கோயில் வரை போயிருக் கிறார் .
ஆனால்
அவரிடம் இரண்டு கோணங்கள் இல்லை பேச்சு ,நிதானம்.
உங்களுடைய கதை பிடிக்காமல்விட்டால் விட்டதுதான்.
எத்தனையோ கோயில் அழைப்புகளை நிராகரிப்பார்.
அவரது வாழ்க்கை சுயகௌரவம் சார்ந்தது.
யாருக்கும் பயமில்லை.
விடுதலைப் போராட்ட காலத்தில் அவரது போராட்ட வடிவ மின்னொளி அமைப்புகள் மிகவும் பிரபல்யமானவை.
அவற்றை விசுவாசமாகச் செய்தவர். அங்கும் கௌரவமாகக் கொண்டாடப்பட்டவர்.
அங்கும் பலரை அச்சமின்றித் திட்டியவர்.
ஆனால் அவரைத் தேடி அவரது திறமை காரணமாக வருவார்கள்.
கலவை (Mixture)மின்னொளி அமைப்புகளை முதல் முதலாக யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்தவர் மனோ அண்ணைதான்.
அவரது சாதனைகள் பல.
ஓர் அற்புதமான நண்பனை இழந்து விட்டேன்.
ஏனெனில் எங்கள் நட்பு விசுவாசிக்கத்தக்கது.
அவரிடம் களங்கமற்ற விசுவாசம் நிறைய இருந்தது.
பலரும் அவரை கோபக்காரனாகவே பார்ப்பார்கள்.
ஆனால் அவரிடம் நிறைய நகைச்சுவை உணர்வு இருந்தது எனக்குத் தெரியும்.
சுயநலம் மிக்க உலகில் அவரது இறுக்கம் அவசியம்தான்.
லைலா அக்காவிடம் தொடர்ந்து கணவரது தொழிலைச் செய்யக் கேட்டிருந்தேன்.
தலையசைத்தார். ஆலயங்களை அழகாக்கியவரின் ஆத்மா சாந்தியடையட்டும்.

# வன் கூடுகள்

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)



நான் சமைச்சுப்போட்ட சேவல், பேடு..விறாத்துக் குஞ்சுகள்..எல்லாத்தையும் ஒரு கூட்டுக்குள்ள இருந்து தான் பிடிச்சனான். அதுகளை நான் பிடிக்கப்பட்ட பாடு... அச்சச்சோ..களைச்சே போய்விட்டன். குழறிக் குழறி.. அங்கையும் இங்கையுமா கூட்டுக்குள்ள ஓடிச் சிப்பிலியாக்கிப் போட்டுதுகள்.
கடைசியா..கதவு வாசலிலை கரப்பைக் கவிட்டுப் பிடிச்சுக் கொண்டு அரிசியைத் தூவி...ஏமாத்தித்தான் பிடிச்சனான்"
அவள் கணவரும், அவரது இராணுவ நண்பர்களும் 'சாப்பிட மூட் இல்லை ' என்று சொல்லிவைத்தாற்போல ஒரேயடியாக எழும்பிவிட்டனர்.
மெனிக்கே கவலையுடன் கேட்டார்,
"நான் அவ்வளத்தையும் எவ்வளவு கஸ்டப்பட்டு தீன் போட்டு ஏமாத்தி கரப்பு வைச்சுப் பிடிச்சனான்.
நீங்கள் ஏன் சாப்பிடாமல் எழும்பிப் போறியள் ?"


*****

' டார்லிங் வட் ஹப்பின்ட் ரு யூ? நீங்களும் ஏன் சாப்பிடேல்லை"
கணவரைப் பார்த்துக் கவலையாகக் கேட்டார் மெனிக்கே.
ஓவென்று..அலறிக் கத்தத் தொடங்கி விட்டார் இராணுவ அதிகாரிக் கிழவர்..வழமையாக நித்திரையில் கத்துவது போல. கேற் வரை சென்றிருந்த ட்ரைவரும் மனைவியும் ஓடிவந்தார்கள்.
ட்ரைவர் மனைவி வெள்ளாந்தித் தனமாகத் தன் கணவனிடம் கேட்டாள்,
"மாத்தையாவுக்கு ஏதும் நடந்துவிட்டதோ? "
ட்ரைவர் சிரித்துக்கொண்டே சொன்னான்.
"அந்தாள் அழுந்த இன்னும் நிறையக் கிடக்கு "
வயோதிபக் கணவர் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தார் மெனிக்கேயின் தோளில் தலை வைத்து.
ட்ரைவர் தனது மனைவிக்கு. ரீவி திரையில் காண்பித்துக் கொண்டிருந்த செய்திப் படங்களை
இராணுவக் கிழவருக்கும் கேட்கக் கூடியதாக வர்ணனை செய்து கொள்ளவும் இராணுவக் கிழவரின் ஓலமும் பிதட்டலும் வழமையைவிட அதிகமாத்தான் இருந்தன.
இப்போதும் கேட்டார் மெனிக்கே,
"பிறந்த நாள் ...நல்ல நாளாப் பாத்து ஏன் இப்படி அழுறியள்? டார்லிங் சொல்லுங்கோவன்...."என்று கேட்கவும்....
தோளில் தலைசாய்ந்தபடியே தேம்பித் தேம்பி கணவர் சொன்ன பதிலைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தாள் மெனிக்கே மெனிக்கேவுக்கு கணவர் சொன்னது.. மீண்டும் மீண்டும் செவிப்பறைக்குள் ஆணியாகக் குத்திக் குத்தி எதிரொலித்தது.
மெனிக்கேயும் ரீ.வி திரையைத் திரும்பிப் பார்த்தார்.
பெரியதும் சிறியதுமாக நான்கும் ஒன்றாக... அருகருகே. ரீ வி திரையில்..புதைகுழி அகழ்வு ஒன்றைக் காட்டிக் கொண்டு இருந்தார்கள் பனைவெளிக்காணி ஒன்றில். 1996 இல் நடந்திருக்கலாம் என்றும் கூறியது செய்தி.

2025.06.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பகால குருதிச்சோகையை தவிர்த்து ஆரோக்கியமான கர்ப்பகாலத்துக்கு...!



க.குருபரன்
*மகப்பேற்று மருத்துவநிபுணர்*

எமது குருதியில் செங்குருதிக் கலங்கள் உள்ளன. இவற்றினுள் ஈமோக்குளோபின் எனும் முக்கியமான கூறு இருக்கிறது. இது உடலுக்குத் தேவையான பிராண வாயுவை உடல் எங்கும் கொண்டு செல்ல உதவும். கர்ப்பகாலத்தில் ஈமோகுளோபின்11g/dl மேல் இருக்க வேண்டும். குருதியில் இருக்கவேண்டிய ஈமோக்குளோபின் இதனிலும் குறையும்போது குருதிச் சோகை ஏற்படுகிறது. பெண்களில் மாதவிடாயின்போது குருதி இழப்பு ஏற்படுவதால் குருதிச்சோகை அவர்களையே மிகவும் பாதிக்கின்றது. ஈமோக்குளோபினை உருவாக்குவதற்கு இரும்புச்சத்து, புரதம் இரண்டும் தேவை. தனியே ஒன்றை மட்டும் எடுப்பது குருதிச்சோகைக்கான தீர்வாக அமையாது. எமது பிரதேசத்தில் உள்ள போசாக்குக்குறைபாடே இங்குள்ள குருதிச்சோகைக்கு முக்கியமான காரணமாகும்.

### குருதிச்சோகைக்கான காரணங்கள்

போசணைக் குறைபாடு , மாதவிடாயின் போதான அதிகளவான குருதிப்போக்கு, பெண்களில் ஏற்படும் ஒழுங்கற்ற, கடுமையான குருதிப்போக்கு, சிறுபிள்ளைகளில் பூப்படைந்த ஆரம்பகாலங்களில் ஏற்படும் அதிக குருதிப்போக்கு , தைரொய்ட் குறைபாடு, குடற்புழுக்கள், உணவுக்குடல் குருதிப்போக்கு, மூலநோய், சில பரம்பரையாக வரும் குறைபாடுகள் (தலசீமியா ), என்பு சம்பந்தமான நோய்கள்

### அறிகுறிகள்

குருதிச்சோகையால் உடலின் தொழிற்பாடுகள் பாதிக்கப்படும். இதனால் குருதிச்சோகை உள்ளவர்கள் பல்வேறு இயலாமைகளை உணர்வார்கள். தோல் வறட்சி, தலைமயிர் உதிர்வு, வளர்ச்சிக் குறைபாடு, நெஞ்சுப் படபடப்பு, நெஞ்சு நோ, சுவாச இடர்பாடுகள்,என்பு நோ, உடலில் மாறாத புண்கள், கவனக்குறைவு

### எவ்வாறு அறிந்து கொள்ளலாம்?

குருதிச்சோகைக்குரிய அறிகுறிகள் இருந்தால் சந்தேகிக்கவேண்டும். குருதியில் ஈமோக்குளோபின் பரிசோதனை செய்வதன் மூலம் குருதிச்சோகையைக் கண்டுபிடிக்கலாம். சில வேளைகளில் குருதியுடன் தொடர்பான நோய்கள் இருக்கிறதா? எனப்பார்க்கப்படவேண்டும். இதற்காக வேறு இரத்தப் பரிசோதனைகள் செய்யப்படலாம். குருதியில் இரும்பின் அளவு சரியாக இருக்கிறதா? எனவும் சோதனை செய்யப்படலாம். குருதிச்சோகைக்கு போசாக்கான உணவுப்பழக்கமே சிறந்த மருந்து. தினமும் இரும்புச்சத்துக் கூடியளவில் உள்ள உணவுகள் அதிகம் எடுக்கவேண்டும். உரிய மருத்துவ ஆலோசனைப்படி இரும்புச் சத்துக் குளிசைகளைப் பாவிக்கலாம்.


### கர்ப்பகாலத்தில் ஏற்படும் குருதிச்சோகை

குருதிச்சோகை உள்ள கர்ப்பிணிப் பெண்ணால் கர்ப்பகாலத்தில் சாதாரணமாக ஏற்படும் உடல் மாற்றங்களைத் தாங்க முடியாது. நெஞ்சுப் படபடப்பு, நெஞ்சு நோ அதிகளவில் ஏற்படும். இலகுவில் சோர்வடைவார்கள். கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சி பெரியளவில் பாதிக்கப்படும். தேவையேற்படின் இரத்தம் ஏற்ற வேண்டி வரலாம். மேலும் உடல் வலிமை குறைவாக இருப்பதால், பிள்ளை பிறப்பதற்கு நீண்ட நேரம் எடுக்கலாம். ஆயுதப் பிரசவம் தேவைப்படலாம். கடுமையான குருதிப்போக்கும் பிள்ளைப்பேற்றின்போது ஏற்படலாம். பிள்ளை பிறந்தபின் தாயின் ஆரோக்கியம் மீள நாள்கள் எடுக்கலாம். கர்ப்பிணிப் பெண்கள் இத்தகைய விளைவுகளைத் தவிர்க்க உரிய மருத்துவ அறிவுரைகளை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

### கர்ப்பகால குருதிச்சோகையைத் தவிர்த்தல்



கர்ப்ப கால ஆரம்பத்தில் இருந்து இரும்புச்சத்துக் குளிசைகளைத் தவறாது உள்ளெடுக்கவேண்டும். தினமும் இரும்புச்சத்துக் கூடியளவில் உள்ள உணவுகளை அதிகம் எடுக்க வேண்டும். இலங்கையில் கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் இரும்புச்சத்துக் குளிசைகள் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படுகின்றன. குருதிச்சோகை இருப்பின், இரும்புச்சத்துக் குளிசைகள் எடுத்து, மூன்று வாரங்களில் மீளவும் ஈமோக்குளோபின் பரிசோதனை செய்யப்படவேண்டும். ஈமோக்குளோபின் அளவு கூடவில்லை எனில் மேலதிக சிகிச்சைகள் தேவைப்படும். (இரும்புச் சத்து ஊசி ஏற்றுதல்) சில வேளைகளில் குருதி ஏற்ற வேண்டி வரலாம்.



### இரும்புச்சத்துக் குளிசை உள்ளெடுக்கும் முறை

இரும்புச்சத்துக் குளிசைக்கும், உணவுக்கும் இடையில் அண்ணளவாக 2 மணித்தியாலங்கள் இடைவெளி இருப்பின் சிறந்தது. தேநீர், கோப்பி, பால், கல்சியம் என்பவற்றுடன் சேர்த்து எடுக்கக்கூடாது. பழச்சாறு விற்றமின் 'சி'என்பவற்றுடன் சேர்த்து எடுக்கலாம்.

### குளிசையின் பக்க விளைவுகள்

சில வேளைகளில் வயிற்றுப்பிரட்டு, சக்தி, சமிபாடடையாத குணம், தோல் கறுப்பாக மாறுதல் போன்ற பக்க விளைவுகள் ஏற்படலாம். தேவைக்கு அதிகமாக இரும்புச்சத்துக் குளிசையை எடுத்தால் தீமைகள் விளையலாம். உரிய முறையில் போசாக்கான உணவு மற்றும் இரும்புச்சத்துக் குளிசைகளை எடுத்தால் ஆரோக்கியமான கர்ப்பகாலத்தை அனுபவிக்கலாம்.

# தமிழ் இன அழிப்பு:...

*(03ஆம் பக்கத் தொடர்ச்சி)*

இருந்தாலும் அதற்கான கோட்பாட்டு ரீதியான வாய்ப்பு இன்னமும் இருக்கவேசெய்கிறது (ஐ.நா. சாசனத்தின் உறுப்புரை 22 (UN Charter Article 22) ஐ.நா. பொறிமுறைக்கு அப்பால் சர்வதேச நீதிமன்றில் (International Court of Justice ICJ) இலங்கை அரசு என்ற கட்டமைப்பின் இன அழிப்புக்கான பொறுப்பு விசாரிக்கப்படவேண்டும்.

குறிப்பிடப்படும் குற்ற வகைகளுக்கான ஆதாரங்களைத் திரட்டுவது, குற்றப்பத்திரங்களைத் தயார்செய்து அவற்றுக்கான விசாரணைகளை வேறு வேறு நீதிமன்றங்களில் தொடுப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் விசாரணைப் பொறிமுறை என்பதற்குள் அடங்கும். ஆனால், சர்வதேச குற்றவியல் நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ தான், முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளும். அரசுகளின் குற்றத்தை விசாரிக்கவல்ல சர்வதேச நீதிமன்றம் தொடக்கம் பல பிராந்திய மற்றும் வெவ்வேறு நாடுகளின் நீதிமன்றுகளிலும் குறித்த குற்றங்களுக்கான ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் வலு கூட இந்தப் பொறிமுறைக்கு இருக்கும். ஆகவே, இந்தப் பொறிமுறையைத் தான் தமிழர்கள் கூட்டாகக் கோரவேண்டும் என பிரான்ஸிஸ் பொயஸ் வலியுறுத்தியிருந்தார்.

அதேநேரம், ஐ.நா. சாசனத்தின் உறுப்புரை 22 க்கு அமைவாக சிறப்புத் தீர்ப்பாயம் அமைவது, அதுவும் ருவாண்டாவுக்கு உருவாக்கப்பட்டதைப்போல ஏற்படுத்தப்படுவது சாலச் சிறந்தது என்பதையும் அவர் வலியுறுத்தியுள்ளார். அதேநேரம், மியான்மர் குறித்த இதேபோன்ற பொறிமுறை ஐ.நா.வின் மனித உரிமைகள் பேரவை ஊடாக 2018 செப்ரம்பரில் அமைக்கப்பட்டது.

இதை ஐ.நா. பொதுச்சபையும் வரவேற்றிருந்தது. ஐ.நா. பொதுச்சபையின் தீர்மானங்களுக்கு நிகரான வலுவையே மனித உரிமை பேரவையின் தீர்மானங்களும் கொண்டுள்ளன என்ற வகையில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையிடமும் இந்தப் பொறிமுறைக்கான கோரிக்கையை முன்வைப்பதும் பொருத்தமானது. இதனைத் தமிழ்த் தரப்பு கவனத்திற் கொள்ளவேண்டும். கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டத்திற்கான அழைப்பிதழ் முன்பக்கத்தில், போர்க்குற்ற விசாரணை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை மற்றும் இன அழிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கே இன அழிப்பு என்பதை மூன்றாம் இடத்திற்குத் தள்ளி போர்க்குற்ற விசாரணை, மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் பற்றிய விசாரணை ஆகியவற்றுக்கு முக்கியத்தும் வழங்கப்பட்டிருந்தமை மிகத் தவறு. ஆகவே, தமிழ்த்தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புகள் இக் கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விசாரணைப் பொறிமுறைகள் குறித்து மேலும் விவாதிப்பது சாலச் சிறந்தது. குறிப்பாக கஜேந்திரகுமார் இதனைக் கவனத்தில் எடுப்பது நல்லது. வேறு சட்ட வியாக்கியானங்கள் சொல்வதை விடுத்து நியாயமான காரண காரியங்களைத் தேடவேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








வெ. விரித்திகன்
தரம் - 6
யா /புனித
பத்திரிசியார் கல்லூரி




ந.நிறோசன்
தரம் -10
சைவச் சிறுவர் இல்லம்.




எம்.ஜிரோஸ்
தரம் - 7
யா/ வரணி மத்திய
கல்லூரி.



ர.ஆரணிகா
தரம் 3D
யா/ இந்து ஆரம்பப்
பாடசாலை



# புறாவும் எறும்பும்

ஒரு நாள் மிகவும் தாகமாக இருந்த எறும்பு ஒன்று, அருகில் இருந்த ஆற்றில் நீரருந்தச் சென்றது. தாகம் தீர நீரருந்திய எறும்பு, கரையில் ஏற முயன்றபோது, தவறிப் போய் ஆற்றில் விழுந்துவிட்டது. நீரோட்டம் வேகமாக இருந்ததால், ஆற்றில் வேகமாக அடித்துச் செல்லப்பட்டது அந்த எறும்பு.

நீரில் தத்தளித்த எறும்பு உதவிக்காக துடித்து அலறியது. அப்போது அங்கு ஆற்றின் கரையில் இருந்த மரத்தில் அமர்ந்திருந்த புறா ஒன்று, அபயம் தேடும் எறும்பின் குரலைக் கேட்டது. உடனே விர்ரென்று எறும்பின் அருகில் பறந்து வந்தது.

"என்னைக் காப்பாற்றேன் ! என்னைக் காப்பாற்றேன்!" என்று புறாவைப் பார்த்து பயத்தில் அலறியது எறும்பு.

சற்று நேரம் யோசித்த புறா, மீண்டும் மரத்தை நோக்கி வேகமாகப் பறந்தது. மரத்தின் கிளையில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாக பறித்து, நீரில் எறும்பு இருந்த இடத்திற்கு அருகில் போட்டது. மெல்ல தட்டுத் தடுமாறி, ஒருவாறு ஒரு இலையை பற்றிக்கொண்ட எறும்பு, அதன் மீது ஏறிக் கொண்டது. இலை மெல்ல நீரின் ஓட்டத்திற்கு ஏற்ப அப்படியே மிதந்து, கரைக்கு அருகில் ஒதுங்கியது. மெல்ல கரையில் ஏறிக்கொண்டு, தனக்கு உதவிய புறாவைக் கண்டு " எனக்கு உதவியதற்கு மிக்க நன்றி"என்றது. அதன் பின், புறாவும் எறும்பும் அவரவர் வழியில் சென்றனர். சில நாள்களுக்குப் பின், ஒருநாள் காட்டில் வேட்டையாட வந்த வேடனொருவனின் கண்ணில் புறா பட்டது. புறாவை நோக்கி அம்பெய்ய குறிபார்த்துக் கொண்டிருந்தான் அவ்வேடன். வேடனைக் கவனியாது வேறு திசை நோக்கித் திரும்பியிருந்தது புறா. வேடனையும் புறாவையும் கண்ட எறும்பு, வேக வேகமாக வேடனை நோக்கி ஊர்ந்தது. சென்ற வேகத்தில், வேடனது காலில் கடித்து விட்டது. வலியால் துடித்த வேடன், சட்டென்று அசைய, அவனது குறி தவறிப்போய் மரத்தில் குத்திட்டு நின்றது. மரத்தின் அதிர்வினால் சுதாரித்துக் கொண்ட புறா, வேகமாகப் பறந்து விட்டது. எறும்புக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

# மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கொள்ள வேண்டும்.அவ்வாறு சர்வதேச சமூகத்தைத் தம்மை நோக்கித் திரட்டிக் கொள்வது என்றால், அதற்கு முதல் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே திரட்டிக் கொள்ள வேண்டும். இது ரில்கோ சந்திப்பில் இக்கட்டுரை ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டது.ஆனால் அத்தகைய பரந்துபட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பில் அந்தச்சந்திப்பில் பெரிய அளவுக்கு விவாதிக்கப்படவில்லை.அவை ஒரு சந்திப்பில் மட்டும் கூடி முடிவெடுக்கக்கூடிய விடயங்களும் அல்ல.

முன்னைய கடிதத்தின் தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ்த் தரப்பு தாயகத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய அளவுக்கு உழைத்திராத ஒரு பின்னணிக்குள்.ஐ.நா. தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டா விதத்தில் விடயங்களை நகர்த்திக் கொண்டுவரும் ஒரு பின்னணியில், மீண்டும் ஒரு கடிதம் எழுதுவதை எப்படிப் பார்ப்பது?

அதிலும் குறிப்பாக அந்தக்கடிதத்தில் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போடவில்லை என்றுசொன்னால் அந்த கடிதத்துக்கு ஒப்பீட்டளவில் பெரிய அங்கீகாரம் இருக்காது.தமிழரசுக் கட்சி அவ்வாறு ஒரு கூட்டுக்கடிதத்தில் கையெழுத்து போடக்கூடிய நிலைமைகள் இல்லை என்பதைத்தான் ரில்கோ சந்திப்பில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு சிவஞானம் கூறிய பதிலுக்கூடாக உணரக்கூடியதாக உள்ளது.ஆயின், தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்கிறது என்று பொருள். இவ்வாறு தமிழ்த் தரப்பு இரண்டாக நிற்பது என்பது தமிழ் மக்களைப் பிரித்துக் கையாள விரும்புகின்ற வெளிச் சக்திகளுக்கு வாய்ப்பானது. ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கு முன் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து

அனுப்பிய கடிதத்திற்கே ஐ.நா.வின் பதில்வினை சாதகமாக இல்லாத ஒரு பின்னணிக்குள், மீண்டும் ஒரு கடிதத்துக்கு, அதிலும் உள்ளதில் பெரிய கட்சி கையெழுத்திடாத ஒரு கடிதத்துக்கு ஐ.நா.வின் பதில்வினை எப்படியிருக்கும்?.

அதிலும் குறிப்பாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு நிகராக அரசாங்கத்துக்கும் ஏழு ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. எனவே தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாள்வதற்குத் தனக்கும் ஆணை உண்டு என்று அரசாங்கம் கூறக்கூடிய நிலைமைகள் அதிகமுடைய அரசியல் மற்றும் ராஜீயச் சூழலில், தமிழ்த் தரப்பில் பிரதான,பெரிய கட்சியை இணைத்துக் கொள்ளாமல் ஒரு கடிதத்தை எழுதினால், அது சர்வதேச அரங்கில் எப்படிப் பார்க்கப்படும்? முதலாவது கடிதத்தின் பின் கடந்த நான்கு ஆண்டுகளாக அந்த கடிதத்தில் எழுதப்பட்டவற்றை நோக்கி சர்வதேச அனைத்துலக சமூகத்தை உந்தித்தள்ளும் விதத்தில் தாயகத்தில் குறிப்பிட்டுச் செல்லக்கூடிய நிர்ணயகரமான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.அதன் விளைவாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கொழும்பில் வைத்து அரசாங்கத்துக்கு நோகாமல் கருத்துக் கூறிவிட்டுப் போயிருக்கிறார்.இந்நிலையில்,மீண்டும் ஒரு கடிதத்தை தமிழ்த் தரப்பு எழுதப் போகிறது. கடிதம் எழுத வேண்டும்.ஆனால் அத்தோடு மட்டும் நிற்கமுடியாது. சர்வதேச சமூகத்தில் ஆதரவு சக்திகளைத் திரட்ட வேண்டும். இதுதான் முன்னைய கடிதத்திற்குப் பின்னரான கடந்த நான்கு ஆண்டுகளில் பெற்றுக்கொண்ட பாடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org